
காப்பிய நிகழ்ச்சிகள்

வே. ஐயா நாய்க்கர்



எஸ். வாஸன் கம்பெனி

1952 S. S. L. C. Non-Detailed Text.

காப்பிய நிகழ்ச்சிகள்

வடஆர்க்காட்டு ஜில்லா, ஆறணி போர்டு ஹைஸ்கூல்
தமிழாசிரியர், வித்வான்,

வே. ஐயா நாய்க்கர்

எழுதியது

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

பதிப்பித்தது

எஸ். வாசன் கம்பெனி,

மயிலாப்பூர் ✤ மதராஸ்.

ரிஜிஸ்தர் செய்தது] 1951 [விலைஅணு 12

ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸ், திருவத்திபுரம், வ. ஆ.

முன்னுரை

நம் நாடு உரிமைபெற்றபோதே நாட்டுமொழியும் முதலிடம் பெற்றுவிட்டது. பிறநாட்டு மொழிகளுக்கு மேலிடங் கொடுத்துத் தாய்மொழியைப் புறக்கணித்து வந்த தமிழ்மக்கள் இனி, தங் தாய்மொழியை அரியணையில் இருத்தி அதன் வாயிலாகவே ஆட்சிபுரியும் பேறு உடையவராயினர். தமிழரே ஆட்சி புரிந்துவந்த பண்டைக்காலத்தில் தோன்றிய பழந்தமிழ்க் காப்பியங்களில் கூறப்படுந் தமிழர் நாகரிகம், கல்வி, வெற்றி, கொடை, கைத்தொழில், வாணிகம் முதலியவற்றை அறிந்து அவற்றை இக்காலத்துக்கேற்ப இன்றியமையாத திருத்தங்களுடன் நடைமுறையில் கொண்டுவருவது அவசியமாகும்.

பண்டைத் தமிழர்நாகரிகத்தை விளக்கும் பழந்தமிழ்க் காப்பியங்கள் யாவும் இக்காலத்தவர்க்குப் பயிற்சியில்லாத பழந்தமிழ்ச் செய்யுள்நடையிலேயே அமைந்திருப்பதனால் அவற்றைப் படித்தறியும் பொறுமையும், காலமும் இக்காலத்துத் தமிழ்மக்களுக்கு வாய்ப்பதில்லை. ஆதலின், பழந்தமிழர்நாகரிகத்தை இக்காலத்தவர் அறிய இயலாமல் இருக்கின்றனர். சிலர் பிறநாட்டுப் பிறமொழிகளைப் பயின்றதனால் அம் மொழிகளையும் அம் மொழியினரின் நாகரிகங்களையும் உயர்த்திப் பேசித் தம்மவரை இழித்தும் கூறலாயினர்.

இத்தகையவர்கள் நம் பழந்தமிழ்க் காப்பியங்களின் சிறப்புக்களைச் சிறிதளவேனும் உணர்வார்களாயின், புதிய வசதிகள் இல்லாத பலநூற்றூண்டுகட்கு முன்பே நம்மவர் இக்காலத்திலும் காண்பதற்கரிய பலப்பல நுண்பொருள்களைக் கண்டிருந்தனர் என்பதை அறிந்து, அவர்வழியில் வந்த நாமும் அத்துறைகளில் பயின்று சிறப்புப் பெற்று வாழவேண்டுமென்னும் ஊக்கம் உறுவர். பள்ளியிற் பயிலும் இள மாணக்கர் தம் பழம்பெருமையறியவும் அதன்மூலம் அப் பழங்காப்பியங்களை வயது வந்தபின்னராவது படித்துப் பயன் எய்தவும் வழியேற்படும்.

இந்த நோக்கத்துடன் தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் இப்போது கிடைத்துள்ள சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் முப்பெருங்காப்பியங்களிலிருந்தும், கொங்குவேளிரால் இயற்றப்பட்ட பெருங்கதையிலிருந்தும் பெருங்காப்பியங்களோடு சேர்த்தெண்ணத்தக்க சூளாமணியிலிருந்தும் ஒவ்வொரு நிகழ்ச்சியை எடுத்து, எளிய, இனிய உரைநடையில் இந்நூலை எழுதியிருக்கின்றேன். இதைப் படிப்பவர்கள் முற்காலத்துத் தமிழ்ப்பெருமக்களின் குணநலன்களையும், மதிநுட்பத்தையும், வீரச்செயல் முதலியவற்றையும் அறியும் வாய்ப்பைப் பெறுவதோடு முதல்நூல்களைப் படிக்கும் ஊக்கமும் பெறுவர் என்பது ஒருதலை.

இப்புத்தகத்தில் வந்துள்ள சீவகன்குணநலங்களால் அவன், தன்னிகரில்லாத்தலைவன்,

தன் ஊக்கத்தினுலும் முயற்சியினுலும் கலை பல கற்றுத்தேர்ந்து உரிய காலத்தில் பகை வென்றவன் என்பதும், பசுநிரை கவர்ந்த வேடரைக் கொல்லாமலே வென்றதனுல், கொல்லாவிரதம் கொண்டவன் என்பதும் அறியப்படும். மாடலன் கூற்றினுல், கோவலன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், பிறர்க்கு அறம் முயன்ற பெரியோன். முன்னை யூழின் வலியானே அவன் துன்பத்திற்கு ஆளானுன் என்பன அறியலாகும்.

மணிமேகலை, "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னுங் கொள்கையுடன், பசிப்பிணியின் கொடுமை யறிந்து பலஇடங்கட்கும் வலிந்து சென்று மக்களுக்கேயன்றி மாக்களுக்கும் உணவளித்துச் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய செய்திகள் அக்காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்மக்களும் தேசத்தொண்டில் ஈடுபட்டு சிறப்புற்று வாழ்ந்துவந்தனர் என்பதைத் தெரிவிக்கும்.

உதயணன், யூகி முதலியவர்களின் கலைத்திறனும், வீரமும் அக்காலத்துக் கலைவளர்ச்சியைப் புலப்படுத்தும். திவிட்டன் விஞ்சையர்தலைவனுனன் என்பது முயன்ருல் முடியாதது ஒன்றில்லை என்பதை வலியுறுத்தும்.

சச்சந்தன் சமைத்த மயிற்பொறி, பிரச்சோதனன் இயற்றிய யானைப்பொறி, திவிட்டன் விமானத்திலேறி விஞ்சையர் உலகம் அடைதல் போன்ற செய்திகள் ஈராயிரம் ஆண்டுகட்குமுன்பே நம்

தேசத்தினர் பலவகைப் பொறிகளைச் சமைக்கும் அறிவு பெற்றிருந்தனர் என்பதைத் தெள்ளிதின் புலப்படுத்தும். இவற்றால் அக்காலத்திலேயே நம் முன்னோரின் நாகரிகநிலை எத்தகையதாயிருந்தது என்பதை நினைத்து நாம் பெருமிதங் கொள்ளுதல் கூடும்.

இந்நூலைக் கலாசாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன். இதனை எழுதுமாறு தூண்டிய பன்மொழிப் புலவர் உயர்திரு, வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கட்கும், இதனைப் பதிப்பித்த S. வாசன் கம்பெனியார்க்கும் என் நன்றி உரியதாகுக.

ஆறணி
20-11-'49

வித்வான், வே. ஜயா நாய்க்கர்

பொருளடக்கம்

காப்பியநிகழ்ச்சிகள்

1. சீவகன்முதல்வெற்றி

திருமகளும் கலைமகளும் பொருந்தி விளங்கப்பெற்றது ஏமாங்கத நாடு. அந்நாட்டின் தலைநகரம் இராசமாபுரம். சச்சந்தன் என்னும் அரசன் அந்நகரில் வீற்றிருந்து ஆட்சி புரிந்துவந்தான்.

சச்சந்தன் விதையநாட்டரசன்மகள் விஜயை என்பவளை மணம்புரிந்தான். அவள் உருவும் நலமும் குணமும் சிறந்தவள். ஆதலின், அரசன் தன் அரசாட்சியைக் கட்டியங்காரன் என்னும் மந்திரியினிடம் விட்டு, தன் தேவியோடு அமர்ந்து இன்புற்றிருந்தான்.

சில நாட்களில் தேவி கருப்பந்தரித்தாள். அப்பொழுது அரசன் அவளுக்கு விளையாட்டுக்காக மயிற்பொறி ஒன்றைச் செய்வித்து அதைச் செலுத்தப் பழக்குவித்தான். பின்னர் ஒருநாள், அமைச்சன் படைகளுடன் அரண்மனையை வளைத்தான். அதனையறிந்த அரசன் தன் தேவியைத் தேற்றி, அவளை மயிற்பொறியில் அனுப்பிவிட்டு, படைகளுடன் போர் புரியலானான். அப் போரின் முடிவில் அமைச்சன் அரசனைக் கொன்று; அரசுகட்டில் ஏறினன்.

மயிற்பொறியில் சென்ற விஜயை, வெற்றிமுரசின் ஒலியைக் கேட்டு, அரசன் கொல்லப்-

பட்டதை உணர்ந்து மெய்தளர்ந்து, கைசோர்ந்து, பொறியைச் செலுத்த இயலாதவளானுள். அதனல் அப்பொறி மெல்ல மெல்ல இறங்கி அந்நகரின் மயானத்தை யடைந்தது. இரவில், அங்கு அவள் ஓர் ஆண்மகவைப் பெற்ருள்; அக்குழந்தையை நோக்கி, தன் நிலைமையை எண்ணி அழுது வருந்தினுள். அப்பொழுது அங்கிருந்த ஒரு தெய்வம் அரசியின் தோழிபோல் உருக் கொண்டு அவளை யடைந்து தேறுதல் கூறிற்று. அத் தெய்வத்தின் சொற்படி குழந்தையை அங்குக் கிடத்தி, அரசன்மோதிரத்தைக் குழந்தையின் கையில் அணிந்து, ஒரு செடிமறைவில் மறைந்து நின்ருள். அப்பொழுது கந்துக்கடன் என்னும் வணிகன், தனது இறந்த குழந்தையை அடக்கஞ்செய்ய வந்தான். வந்தவன், இளஞாயிறுபோல் விளங்கிய அரசகுமாரனைக் கண்டு, மகிழ்வோடு எடுத்து, மோதிரத்தை மறைவாக வைத்துக்கொண்டு, தன் இல்லம் சார்ந்து மனைவியிடம் குழந்தையைக் கொடுத்தான். அவள் அதனைத் தன்குழந்தையாகவே நினைத்து மகிழ்வுற்று அன்பொடு வளர்த்துவந்தாள். தெய்வம் அரசியைத் தண்டகாரண்யத்தில் ஒரு தவப்பள்ளியில் சேர்த்து மீண்டது.

கந்துக்கடன், குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தான்; உரியவயதில் அச்சணந்தி என்னும் ஆசிரியரிடத்தில் விடுத்து, பல கலைகளிலும் பயில்வித்தான். சீவகனும் ஆசிரியனை வழிபட்டு, யானையேற்றம், குதிரையேற்றம், படைக்கலப்பயிற்சி முதலியவற்றையும், அரசியல்நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தான். ஒருநாள்

ஆசிரியர், சீவகனிடம் தனியே அவன்வரலாற்றைத் தெரிவித்து, அவன் செய்யவேண்டுபவற்றை அறிவுறுத்தி, தவம்புரியச் சென்றார்.

நந்தகோன்

இராசமாபுரத்தில் நந்தகோன் என்னும் ஆயர்தலைவன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் அரசனுடைய ஆவினங்களைக் காப்பவன். அவன்ஏவலராகிய ஆயர்கள் ஆவினங்களை மலைகளிலும் காடுகளிலும் மேய்த்துவருவர்.

வேடர் அரசன்பசுக்களைக் கவர்தல்

அரசனுடைய ஆனிரைகள் மலைகளிலும் காடுகளிலும் பசும்புல்லை மேய்ந்து நன்றாக வளர்ந்து பருத்திருந்தன. அப் பசுக்களைக் கண்ட வேடர்கள் அவற்றைக் கவர ஆலோசனை செய்தனர்; குறிப்பிட்ட ஒரு நாளில் அப் பசுக்கள் மலையில் வரும்போது அவற்றைக் கவர முடிவு செய்தனர்; அவ்வாறே குறித்த நாளில் பசுக்களைக் கவரப் புறப்பட்டனர். அப்போது ஆந்தை சிறியது. அதைக்கேட்ட நிமித்திகனான ஒருவேடன் அதன் கருத்தையறிந்து, "பசுக்கூட்டங்களை நாம் கவர்ந்தோமாயின் அரசனுடைய நாற்படைகளும் வந்து நம்முடன் போர் புரிந்து தோற்றுப்போகும். ஆயினும், பின்னர் ஒருவன் தேரில் வந்து நம்மை வென்று நிரைகளை மீட்டுச் செல்வான்" என்று கூறினான்.

அதுகேட்ட வேடுவர் வெகுண்டு, "எத்தகைய ஆற்றல் உடையவனாயிருந்தாலும் ஒருவன் நம்

அனைவரையும் வெல்வான் என்பது அறியாமை" என்று கூறி, பலன் சொன்னவனை இகழ்ந்துரைத்தனர்; பின்னர், மதுவைப் பருகி, ஆகோள்பறை, உடுக்கை முதலியவற்றை முழக்கி, முருகனை வணங்கி, காட்டில் சென்று பசுக்களின் வருகையை எதிர்நோக்கி யிருந்தனர்.

ஒருநாள் ஆயர்கள் பசுக்களை ஓட்டிச்செல்லும்போது புள்நிமித்தங்கூறும் வள்ளுவன், "பசுக்கூட்டத்தின் உள்புகுந்து கரிக்குருவி அலைத்தது ஆதலால் இன்று பசுக்களை விழிப்புடன் காத்து வாருங்கள்" என்று ஆயர்களிடம் கூறினன். அது கேட்டுப் புதுமணப்பிள்ளைகளான கோபாலர்களும் போர்க்கு ஆயத்தமாய்ப் புறப்பட்டுப் பசுக்களுடன் சென்றனர். அவை காட்டிற்சென்று மேய்ந்தபோது, வேடர் திரண்டு வந்து மாரிபோல் அம்புகளைப் பொழிந்து பசுக்களைத் துரத்தினர். ஆயர்களும் அவர்களுடன் பொருது ஆனிரைகளை விடாது மடக்கினர்; ஆயினும், வேடர்களின் சுடுங்கணைகளால், மத்தினுல் கடையப்பட்ட தயிர்போல் ஆயர் சிதறியோடலாயினர்.

வேடர்கணைகளைத் தாங்கமாட்டாத ஆயர் குழலையும், கோடரியையும் போட்டுவிட்டு முதுகிட்டு ஓடிவந்து தங்கள் தலைவனுன நந்தகோனிடம், "தயிர்கடையும் நிலைமத்திற் சுற்றிய கயிறுபோல, அவ்வேடர் நிரையின் அப்பக்கம் விடின் இப்பக்கம் விடுதல்இல்லை! இப்பக்கம் விடின் அப்பக்கம் நெகிழ விடுதல்இல்லை. நாங்கள் எவ்வளவு தடுத்தும் மீட்க

இயலவில்லை. அவர்கள் நிரையைக் கவர்ந்தே போயினர்'' என்றுகூறி வாய்விட்டு அரற்றினர். அதைக் கேட்ட ஆய்ச்சியர் வலையில் அகப்பட்ட மான் போலவும், மயில்போலவும், கூந்தல்குலைய ஓடிவந்து வயிற்றில் அறைந்துகொண்டு அழுதனர்; தம் மனை-களில் உள்ள கன்றுகளைத் தழுவிக்கொண்டு, "உங்-கள் தாயர்களை வேடர்கள் அடித்து ஓட்டிச்சென்று-விட்டனரே! இனி நீங்கள் எப்படிப் பிழைப்-பீர்கள்!'' என்றுகூறி, 'ஓ' என்று புலம்பினர்.

இடைச்சேரியில் உள்ள ஆயர்கள் நந்தகோ-னுடன்கூடி விரைந்து சென்று அரசனாகிய கட்டி-யங்காரனிடம் வேடர் நிரை கவர்ந்த செய்தியைக் கூறினர். அதுகேட்ட கட்டியங்காரன் கண்ணில் தீப்பொறி பறக்குமாறு சினந்து, கூற்றுவன்போல் அதட்டி, சேனைத்தலைவரை நோக்கி, 'உடனே காற்றினும் கடுகிச் சென்று நிரையை மீட்டுவருக' என்று கட்டளையிட்டான்.

அரசன்படையின் தோல்வி

அரசனுடைய நாற்படைகளும் திரண்டு எங்-கும் பரவிப் பூமிநெளியும்படி சென்றன. போர்-முரசு முழங்கியது. சங்குகள் ஒலித்தன. படைகள் விரைந்து சென்று வேடரை அணுகின. வேடர்-கூட்டமும், அரசன்படைகளும் இரவும் பகலும் எதிர்த்துப் பொருவதுபோல் பொருதன. வாளை ஏந்திய வேடர்கள் புலிகளைப்போல் சீறி, முன்வந்த வீரர்களை வெட்டி வீழ்த்தினர்; யானை குதிரைகளை வெட்டி மாய்த்தனர். யானைகள் மலைகள் சாய்வது-

போல் கவிழ்ந்து வீழ்ந்தன. தேர்கள் கவிழ்ந்தன. மடிந்தவர் ஒழிய எஞ்சியிருந்த அரசன்படைவீரர் படை கொடி முதலியவைகளைப் போர்க்களத்தில் போட்டுவிட்டுப் புறங்காட்டி ஓடினர்.

அச்சேனை முதுகிட்டு வந்ததை யறிந்த ஆயர்கள் ஓடிச்சென்று கட்டியங்காரனிடம் அச்செய்தியைக் கூறினர். அவன் அதைக் கேட்டு உளம் வருந்தி, செய்வது இன்னதென் றறியாமல் திகைத்து வாளா இருந்தான்.

நந்தகோன் முரசறைவித்தல்

கட்டியங்காரன் அல்லலில் ஆழ்ந்து வாளா-இருப்பதை யறிந்த நந்தகோன், "பசுக்களை மீட்டு வருபவருக்கு நந்தகோன் தன் மகள் கோவிந்தையை மணஞ்செய்து கொடுப்பான்" என்று நகர்வீதி-களில் முரசு அறைவித்தான். அதனைக் கேட்ட நகரமாந்தர் "அரசன்படைகளே வேடர்க்குத் தோற்றுவிட்டன எனின், அவர்களை வெல்பவர் யாவர்? கோவிந்தையேயன்றித் தேவமகள் கிடைப்-பதாயிருப்பினும், அவ்வேடரோடு பொருது எம-னுலகம் செல்ல யாருமே விரும்பார்" என்று கூறிக் கைதொழுது, அதனை உட்கொளாதொழிந்தனர்.

நிரைமீட்சி

இச்செய்தியை அறிந்த சீவகன், "நல்லொ-ழுக்கம், பசு, துறந்தார், பெண்டிர், பாலர், பார்ப்பார் என்பவரைக் காப்பாற்றேனாயின், தன்னிடம் தங்கி-யிருந்த வீரமகள் அயலானிடம் சென்றதை யறிந்தும்

வாளாவிருக்கும் பேடியாகிப் பின்னும் பால்-சோற்றை விரும்பியிருக்குங் கட்டியங்காரனுக்கு நான் நிகர் ஆவேன்'' என்று சூளுரை கூறி, நிரை-மீட்டற்கு ஆயத்தன் ஆனான்; உடனே தேரில் குதிரைகளைப் பூட்டினான்; வில்லை வளைத்தான்; அம்புகளைத் தெரிந்தெடுத்தான்; தோழர் ஐந்நூற்று நால்வரோடும் படைஞரோடும் மின்னல்போல் தேரைச்செலுத்திச் சென்றான்.

அத்தேரைக்கண்ட நிமித்திகன் வேடர்களை-நோக்கி, "இதோ வருகின்றவன் வல்வில்லாளி. ஒரு தேரிலேயே நாற்றிசையும் சென்று போர்-புரிந்து வெல்ல வல்லவன். இவனை வெல்ல நம்மால் இயலாது. ஆதலால் இப்போது இவனுடன் போர்-செய்யாமல் மீண்டுபோதலே தக்கது'' என்று கூறினான். அதுகேட்ட வேடர், "ஆழமான நீரி-னுள் முதலையை வெல்ல யானையாலும் முடியாது. அதைப்போலக் காட்டில் நம்மை வெல்ல எவராலும் முடியாது. ஒற்றைத் தேரில் வருகின்ற இவனா நம்மை வென்றுவிடுவான்! இவன் ஆற்றலைக் காண்-போம்'' என்றுகூறி, பசியால் இரையைக் கவ்விய பாம்பைப்போல் கவர்ந்த பசுக்களைக் கைவிடாமல், போர்செய்ய முனைந்தனர்.

வேடர்கள் சீவகன்படைஞரை நோக்கி, "அரசனுடைய கடல்போன்ற படைகளை யாம் வென்ற செய்தியை நீங்கள் அறியீர்களோ! கூற்று-வர் போன்ற எங்களோடு பொருது நீங்கள் வீணே மடியாமல் பிழைத்துப்போமின்'' என்று கூறி,

சீழ்க்கை யடித்தும் பறை கொட்டியும் ஆரவாரஞ் செய்தனர். அதற் கெதிராய்ச் சீவகன்படை-வீரரும் சங்கும் பறையும் கொம்பும் முழக்கினர். இருதிறப்படைகளும் காரும் கடலும் போல் முழங்கி எதிர்த்தன.

சீவகன்தேர் கொள்ளிவட்டமும் காற்றுடி-யும் போல் நாற்றிசையிலும் சுற்றிவந்தது. தனக்கு வேடர் நிகர் அன்மையாலும், அவரோடு பகையின்-மையாலும், தனதுஅருளும் வீரமும் காரணமாக நிரைமீட்கச்சென்றான்ஆதலாலும் சீவகன் விளை-யாட்டாகவே கன்னிப்போர் செய்தான். கருடனு-டைய சிறகின் ஒலியினலேயே பாம்பு படம்ஒடுங்-குதல் போல், சீவகன்தேர்ஒலியாலும், தம்மைச் சூழ்ந்த துகளின் மயக்கத்தாலும் வேடர் மன-வெழுச்சி குன்றி, வலையில்அகப்பட்ட கோழியைப்-போல் செயல்குறைந்தனர்; தம் நெஞ்சில் புகாதபடி அறத்தைக் கைவிட்டதுபோல் மறத்தையும் கை-விட்டனர்.

அவ்வாறு ஆற்றல் குறைந்துநின்ற வேடர், "'ஆந்தை ஒருதேர் வரும் என்று சொல்கின்றது' என்று இப் புறுத்தலைவேடன் நமக்குச் சொன்ன நிமித்தம் பொய்த்துவிட்டது. நம்மை வெள்ளம் போன்ற சேனை வந்து வளைத்துக்கொண்டது. இப்போது நிரைகொள்வது இயலாது" என்று-கூறிப் புறங்காட்டி ஓடலாயினர். தன்னை எதிர்த்து வந்த வேடர் ஐம்பத்தாறுயிரவர்அம்பையும் வில்-லையும் சீவகன்ஒருவனே தன்கணையால் அறுத்து

வீழ்த்தி, அவ் வேடர்உயிர்க்குத் தீங்கு செய்யாமல், அவர்கள் புறங்காட்டி ஓடும்படி செய்து, வில்லின் ஒலியினாலேயே நிரைகளை மீட்டான். பசுக்கள் துள்ளிக்கொண்டு மீண்டன. ஆயர் ஆரவாரஞ் செய்தனர்.

சீவகன், தனக்கும் தோழர்க்கும் யாதோர் ஊறும் இன்றி வேடரைவென்று நிரைமீட்ட செய்தியை யறிந்த கட்டியங்காரன் 'வாள்பட்ட புண்ணில் வேல்எறியப்பட்டு முறிந்துநின்றதுபோல்,' மனம்வருந்தினான். நகரமக்களும் நந்தகோனும் பேருவகையுற்று ஆர்த்தனர்.

நகரமக்கள் சீவகனை வரவேற்றல்

சீவகன் நகரவீதியில் வரும்போது மாந்தர் தோரணங்களைக் கட்டி, மலர்மாலைகளைத் தூக்கி, வாசனைப்பொருள்களை எங்கும் தெளித்து வீதிகளை அழகுசெய்தனர்; விராடன்பேரூரில் நிரையை மீட்டுவந்த விசயனைப்போல் நிரைமீட்டுவந்த சீவகனை வாழ்த்தினர்; வரவேற்றனர். அவ்வீரனைக் காண்பதற்கு அன்னமும் மயிலும்போல மகளிர் அழகிய வீதிகளில் திரண்டனர். "'கொடைக்கு ஒருவன், படைக்கு ஒருவன்' என்றுகூறும் இருதிறமும் இவன்ஒருவனிடமே பொருந்தியுள்ளன. இவனைப் பெற்ற நற்றாய் பெருந்தவம் உடையவள். இவனைப் பெறுவதற்கு அவள் எந்தமலையில் தவம்செய்தாளோ! இவ் வெற்றிவேற்காளைக்கு நிகராவோர் மண்ணுலகத்தில் இலர்; விண்ணுலகத்திலும் இரார். இவ் வீரனைப் பெற்ற பெரும்புண்ணியம் உடையோர் யாரோ!" என்று மகளிர் பாராட்டினர்.

சீவகன்தேர் கந்துக்கடனில்லத்தை அடைந்த போது மகளிர்பலர் சாமரை, விளக்கு, பொன்குடம், இணைக்கயல், கண்ணாடி, அங்குசம், முரசம், கொடி என்னும் அட்டமங்கலமும் ஏந்தி அவனை வரவேற்று, வீட்டினுள் அழைத்துச் சென்றனர். தாயும் தந்தையும் ஆலத்திமுதலியவற்றால் அவனுக்குக் கண்ணேறுகழித்தனர்; தேவருலகமே தமக்குக் கிடைக்கப்பெற்றவர்போல் மகிழ்ச்சியுற்றனர். உற்றாரும் தோழரும் சீவகனையும் அவன்பெற்றோரையும் போற்றிப் புகழ்ந்தனர்.

நந்தகோன்வேண்டுகோள்

ஆயர்தலைவன் நந்தகோன் நிரைமீட்டதனை யறிந்து மகிழ்ந்து சீவகநம்பியை அடைந்து கூறுவான்: "அண்ணலே, இதனைக் கேட்டருள்க. இந்நாட்டு மன்னனாகிய ச்ச்சந்தன் தன்தேவி விசயையை விரும்பி, அரசபாரம் முழுவதும் அமைச்சனாகிய கட்டியங்காரன்பால் சுமத்தி அரண்மனையில் தங்கியிருந்து, பின் அக் கட்டியங்காரனாலேயே கொல்லப்பட்டான். அரசன் கொல்லப்பட்ட அன்றே பெரியமலைமீது ஏறி விழுந்து உயிர்விடத்துணிந்தேன். சிறிய ஆலம் வித்துத் தெறித்து வீழ்ந்து மறைந்து வளர்வதுபோல விசயமாதேவிக்குச் சந்ததி யுளது என்று கருதி வருத்தத்தோடு உயிர்வைத்திருந்தேன்.

"யான் அரசனுடைய குடிவழி வந்தவன்; அவனுடைய ஆனிரைகளைக் காப்பவன்; கோவிந்தன் என்னும் பெயரினேன். என் மனைவி கோதா-

வரி என்பவள். அவள் பெற்ற மகள் கோவிந்தை என்னும் பெயரினள். அக் கோவிந்தை அழகு நிரம்பப் பெற்றவள். அவள் பால்போல் இனிய சொல்லை உடையவள்; வெண்ணெய்போல் மிருது வானவள்; உருக்கிய நெய்போல் மேனி உடையவள்; கருவிளைமலர்போல் கண் உடையவள். ஆயர் பலர் அவளை மணக்க விரும்பி வந்தனர்; என்னை இரந்து வேண்டினர். யான் மறுத்துவந்தேன். அதனால் அவர்கள் என்மேல் வருத்தம் உற்றனர்.

"யான் அறிவித்த வண்ணம் அவளைப் பொன்னால் செய்த பதுமைகள் ஏழுடன் தமக்குத் தருவேன். தாம் மணந்து கொள்க. ஆவின் நறுநெய்யும் ஆடைத்தயிரும் தீம்பாலும் எங்கும் நிறைப்பேன். அவளை மணப்பதனால் உமக்கு நன்மையே வரும்.

"நம்பி, எனது குலத்தைப்பற்றி நினைக்க வேண்டா. குறமகள்வள்ளியை முருகக்கடவுள் மணக்கவில்லையா? ஆய்க்குலத்தில் தோன்றிய நப்பின்னைப்பிராட்டியைக் கண்ணபிரான் மணம் புரியவில்லையா? இவ்வாறு மணம்புரிந்ததனால் அவர்கள்பெருமைக்கு இழுக்கு நேர்ந்ததோ? இல்லையே. உம் அடியாளாகிய கோவிந்தையை மணப்பதனால் உம் பெருமைக்கு இழுக்கு நேராது" என்று கூறி, தன் மகளை மணக்குமாறு மன்றாடினான்.

திருமணம்

சீவகன் கோவிந்தையைத் தன்தோழர்களுள் ஒருவனான பதுமுகனுக்கு மணம்செய்விக்குமாறு

நந்தகோனிடம் கூறினன். அவனும் மகிழ்ந்து அதற்கு உடன்பட்டு, ஆயர்பாடியை அடைந்து திருமணத்திற்கு ஆவன செய்தான். ஆய்ச்சியர் பலர் கூடி நாழியுள் இருந்த நெய்யை, பசுவின் கன்று தின்று மிகுந்த புல்லால் தோய்த்துக் கோவிந்தையின் தலையில் தடவி, அகப்பையால் நீரை முகந்து ஊற்றி, "பசுவையும் தொழுவையும்போல் நீயும் உன் கணவனும் நீடூழி வாழ்க" என்று வாழ்த்தி அவளை நீராட்டினர். மங்கலத்திற்கு ஏற்ற காதணியை யிட்டு, மாலை யணிந்து, சந்தனம் பூசிக் கோலஞ் செய்தனர்.

பின்னர், ஏறுகோட்பறை முழங்க, ஆயர் கோவிந்தையை வீதிகளின் வழியே அழைத்துச் சென்று கந்துக்கடன் மனையை அடைந்தனர். நந்தகோன் நன்னீர் சொரிந்து கொடுக்க, கோவிந்தையைப் பதுமுகன் மணந்தான். நந்தகோன் அவனுக்கு ஈராயிரம் பசுக்களையும், ஏழு பொற்பாவைகளையும் சீதனமாகக் கொடுத்தான். பதுமுகனும் கோவிந்தையும் சீவகன் வெற்றியை வாழ்த்தி, அன்பும் அறனும் உடையவராய் வாழ்ந்தனர்.

[சீவகன் பல வீரச் செயல்கள் புரிந்து, சிறிதுகாலத்தின்பின் கட்டியங்காரனை வென்று தன் நாட்டைக் கைப்பற்றி இனிதே ஆண்டுவந்தான்.]

2. கோவலன் கொடைச்சிறப்பு

பழைய தமிழ்நாடு சேரநாடு சோழநாடு பாண்டியநாடு என்று முப்பெரும் பிரிவினதாய் விளங்கியது. அவற்றை முடியுடை மூவேந்தர் ஆண்டுவந்தனர். சோழநாடு வானம் பொய்ப்பினும் வற்ருமல் பாயுங் காவிரியின் வெள்ளத்தினல் "சோழவளநாடு சோறுடைத்து" என்று புகழப்படும் பெருமையுடைய தாயிற்று. சோழநாட்டிற்கு உறையூர், காவிரிப்பூம்பட்டினம் முதலியவை தலைநகரங்களாயிருந்தன. காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாயும் விளங்கியது. காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் அப்பட்டினம் இருந்தது. அதனல் அதற்குப் **புகார்** எனவும் பெயர் வழங்கிற்று.

புகார்நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இருபெரும் பிரிவுகளை உடையது. வாணிகத்தின் பொருட்டுப் பலநாட்டுமக்கள் அந்நகரில் கூடியிருப்பர். எவ்வகைப்பொருளும் புலிப்பொறி பொறிக்கப்பட்டுத் துறைமுகத்தில் ஏற்றுமதி ஆகும். எல்லாப் பண்டங்களும் அவ்வூரில் கிடைக்கும். அணிகளும் மணிகளும், ஆடைகளும் கூலங்களும் விற்கும் ஆவணவீதிகள் மலிந்திருக்கும். கடற்கரையில் கலங்கரைவிளக்கம் உயர்ந்து தோன்றும்.

வீதிகளில், பகலில் வாணிகம் புரியும் நாளங்காடிகளும், இரவுமுழுதும் திறந்திருக்கும் அல்லங்காடிகளும் நிரைநிரையாய் விளங்கும். அவற்றில்

பொருள் வாங்குவோர் எப்போதும் கூட்டமாய்த் திரண்டிருப்பர்.

கோவலன் வாழ்க்கை

அந்நகரத்து வணிகரில் பெருங்குடியர்மரபில் பெருங் கொடையாளனான மாநாய்கன் என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன்மகள் கண்ணகி என்னும் பெயரினள். அவள் கற்பினால் அருந்ததியையும், பொற்பினால் திருமகளையும் நிகர்த்து விளங்கினாள்.

அந்நகரில் மாசாத்துவான் என்னும் மற்றொரு வணிகன் பெருஞ்செல்வனாய் விளங்கினான். அவன்மகன் கோவலன். அவன் அறிவிலும், கல்வியிலும் மேம்பட்டுத் திகழ்ந்தான்; வாணிகத்துறையிலும் தேர்ச்சி பெற்றான். அவன் பளிங்குபோன்ற களங்கமற்ற உள்ளம் படைத்தவன். அவனுக்குப் பதினாறு ஆண்டு நிரம்பியபோது, பெற்றோர் கண்ணகியை மணம்புரிவித்தனர்.

கோவலனும் கண்ணகியும் மலரும் மணமும்போல் மனம்கலந்து இன்புற்றுவாழ்ந்தனர். இவ்வாறு இருவரும் மகிழ்ந்திருக்கும் நாட்களில், கோவலன் தாய் தன்மகனும் மருகியும் தனிமனையில் இல்லறம் நடத்தி விருந்தோம்புதலையும், அறம் செய்தலையும் கண்டு மகிழ விரும்பி, வேறொருமாளிகையில் வேண்டும் பொருள்களுடன் ஏவலாளரை அமர்த்தி, அங்கு அவர்களை வாழும்படி செய்தாள். தனிமாளிகையில் கோவலனும் கண்ணகியும் அன்பும் அற-

னும் உடையவராய், அறவோர்க்கு அளித்தும், இன்முகத்துடன் விருந்தினரை உபசரித்தும் இல்லறத்தை இனிதே நடத்திவந்தனர். இவ்வாறு சிலயாண்டுகள் கழிந்தன.

காவிரிப்பூம்பட்டினத்தில் மாதவி என்னும் நாடகமாது ஆடல் பாடல்களில் பயின்று அரங்கேறி, அரசனிடம் பட்டமும் பரிசிலும் பெற்றுச் சிறந்து விளங்கினள். அவளுடைய ஆடல்பாடல்களில் ஈடுபட்ட கோவலன் அவளொடு தங்கி வாழ்ந்திருந்தான். அக்கால வழக்கப்படி நகரில் நடைபெற்ற இந்திரவிழாவின் இறுதியில், கடலாடச் சென்ற மக்கள்திரளையும் அங்கு நடைபெறும் விநோதங்களையும் காணவிரும்பி, கோவலனும் மாதவியும் கடற்கரைக்குச்சென்றனர்; அங்கு ஓரிடத்தில் அமர்ந்து உரையாடியும் பாடியும் இன்புற்றிருந்தனர்; பின்னர் மாதவி யாழ்வாசித்தபோது கோவலன் ஊழ்வினையால் மனம் மாறுபட்டு அவளைவிட்டு நீங்கித் தன் இல்லத்தை அடைந்தான்.

கோவலன் வருகை

கண்ணகியின் தோழி அவளை யடைந்து, "கோவலர் நம்தலைவாயிலில் வந்துள்ளார்" என்று கூறினள். கோவலனும் உட்புகுந்தான். கண்ணகி அவனை வணங்கினள். அவளது வாடிய மேனியையும் வருந்திய உள்ளத்தையும் கண்டு மனம் வருந்திய கோவலன் "நான் முன்னோர்தேடிய பெருஞ்செல்வத்தைத் தொலைத்து வறுமையுற்றேன். இது எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது" என்று கூறினன்.

"மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமையால் இப்படிக் கூறுகின்றார்" என்று கருதிய கண்ணகி, "என்னிடம் இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருள்க" என்றாள். கோவலன் "அச் சிலம்புகளை வாணிகத்துக்கு முதலாகக்கொண்டு, மதுரையில் சென்று, பொருள் ஈட்ட நினைக்கின்றேன். நீயும் வைகறையில் என்னுடன் புறப்பட்டுவரல்வேண்டும்" என்று வேண்டினான். கண்ணகியும்மகிழ்ச்சியுடன் அதற்கு உடன்பட்டாள்.

வழிநடை

கோவலனும் கண்ணகியும் வைகறையில் எழுந்து, காவலர் அறியாதபடி இடைநகர்வாயிலைக் கடந்து, திருமால், புத்தன், அருகன் இவர்கோயில்களை வணங்கி, நகர்ப்பெருவாயிலையும் கடந்து மதிலுக்கு புறத்தே சென்று, காவிரியின் வடகரைச்சோலைவழியே மேற்கு நோக்கி ஒருகாததூரம்போய், ஒரு குளிர்ந்த சோலையை அடைந்தனர். அதற்குள் நடையினால் தளர்ந்த கண்ணகி 'மதுரைப்பதி எது?' என்று வினவினாள். கண்ணகியின் தளர்ச்சி கண்டு வருந்திய கோவலன் வருத்தத்தை மறைப்பதற்குக் குறுநகை புரிந்து, 'அவ்வூர் ஐந்தாறு காதத்தில் உளது. இனி அண்மையதே' என்று இருபொருள் படக் கூறினான்.

இருவரும் சற்றுநேரம் இளைப்பாறியபின், பக்கத்தேயுள்ள தவப்பள்ளியில் இருந்த சைனத்துறவியான கவுந்தியைக் கண்டு வணங்கினர். அம்முதுமகள் அவர்களை நோக்கி, "சிறந்த அழகும்,

நற்குடிப்பிறப்பும், நல்லொழுக்கமும் உடையவராய்க் காணப்படும்நீங்கள், தீவினையாளர்போல் இருப்பிடம் விட்டு வரக் காரணம் என்ன?'' என்று வினவினள்.

அதற்குக் கோவலன் "அம்மையீர், நான் மதுரைமாநகர் சென்று நல்வழியில் பொருள்தேட விரும்பினேன். இதுவே இங்கு நாங்கள் வந்ததன் காரணம்'' என்றான். அதுகேட்ட கவுந்தி "நீங்கள் செல்லுகின்ற வழி காடுகளை இடையிடையே உடையது. இவளுடைய மெல்லிய அடிகள் பருக்கைக்கற்களில் நடக்கப் பொறுக்காவே! ஊழினை வெல்ல வல்லார் யார்!'' என்று இரங்கிக் கூறி, பின், "யான் பெரியோர்களிடம் அறவுரை கேட்கும் விருப்புடையேனாகலின், உங்களுடன் மதுரைக்கு வருகின்றேன்'' என்றார். கண்ணகிக்கு ஒரு பெண்துணை கிடைத்ததுபற்றிக் கோவலன் மிக்க மகிழ்ச்சி யுற்றான். கவுந்தி மூட்டையையும் மயிற்பீலியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

மூவரும் காவிரிக்கரை வழியே பலவகை ஓசைகளைக் கேட்டுக்கொண்டு நாள் ஒன்றுக்குக் காதவழியாக நடந்து சென்று திருவரங்கத்தை அடைந்தனர்; அங்கு அற முரைக்கும் அருகசாரணர்இருவரைக் கண்டு வணங்கி, அறவுரை கேட்டு அருகதேவனை வணங்கினர்; பின்னர் ஓடம் ஏறிக் காவிரியின் தென்கரை யடைந்து ஒரு சோலையில் தங்கியிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மாங்காட்டுப் பார்ப்-

பனால் மதுரைக்குச் செல்லும் மூன்றுவழிகளின் இயல்பையும் அறிந்து, அவற்றுள் இடைவழியே மூவரும் சென்றனர். வெயிலில் வழிநடத்தற்கு இயலாமல் கண்ணகி வருந்துவதைக் கண்ட கோவலன், பாண்டியன் செங்கோல்நடத்தும் நாட்டில் இரவிலும் தீமை ஏதும் நிகழாதென்று கூறி, நிலாவொளியில், கவுந்தி கூறும் அறவுரைகளைக் கேட்டுக்கொண்டே கண்ணகியை நடத்திச்சென்றான். அவ்வாறு சென்று வைகையாற்றைக் கடந்து மதுரைநகரின் கீழ்த்திசைவாயிற்புறத்துள்ள புறஞ்சேரியில் அருகமுனிவர்கள் இருப்பிடத்தில் மூவரும் தங்கினர்.

கோவலன் மதுரை காணல்

செந்தமிழ்நாட்டின் தலைநகரான மதுரையம்பதி பாண்டியர் செங்கோலோச்சிவரும் பெருமையும் பழமையும் வாய்ந்தது. அம் மதுரையில் பற்பல தேவகோட்டங்களும், நெடுமாடநிரைகளையுடைய பெரியவீதிகளும், நவமணிக்கடைகளும், கூலமறுகுகளும், நாளங்காடி (Day Bazzar) அல்லங்காடி (Evening Bazzar) முதலிய கடைகளும் சிறப்புடன் விளங்கிக் காண்போர்மனத்தையும் கண்ணையும் கவரும். அங்கு மும்முரசின் ஒலியும், மறையொலியும், மக்கள்பேச்சின் ஒலியும் கலந்து பேராரவாரமாய்க் கேட்கும்.

புறஞ்சேரியில் தங்கிய கோவலன் கவுந்தியை வணங்கி, "தவமுடையீர், 'நற்குடியில் பிறந்து நல்லொழுக்கம் உடையவர்கள் மகளிரோடு நெடுந்தூரம் வழிநடவார்' என்று பெரியோர் கூறுவர். என்

மனைவி மிக்க துன்பம் உறும்படி, கனவிலும் அறி-யாத நாட்டிற்கு அவளுடன் நடந்து சிறுமை யுற்-றேன். இதற்கு நான் செய்த தீவினை யாதோ?'' என்று கூறி வருந்தினான். கவுந்தி "ஐய, கவலைப்-படவேண்டா. முற்பிறப்பில் நல்வினை பல செய்து தீவினையும் சிறிது செய்ததனால், உன்சுற்றத்தார், பெற்றோர் முதலியவர்களையும், பெருஞ்செல்வத்தை-யும் துறந்து காதலியோடு வந்து பெருந்துயர் உழந்-தாய். தீவினை தவறாது வந்து பயனை ஊட்டும். அதற்கு வருந்துதல் அறிவுடைமையன்று. இப்ப-டித் துன்புற்றோர் பலர். இராமனையும், காதலியைக் கானகத்துக் காரிருளில் கைவிட்ட நளனையும்-போ லன்றி, நீ காதலியைப் பிரியாமல் வாழ்கின்-றாய். உன் துன்பம் அத்துணைப் பெரிதன்று'' என்று உரைத்துத் தேற்றினார்.

இவ்வாறு தேற்றப்பட்ட கோவலன், மதுரை-யில் தான் தங்கியிருத்தற்கு ஏற்ற இடம் பார்த்து வருவதற்குக் கவுந்தியிடம் விடைபெற்றுப் புறப்-பட்டு, வாளேந்திய யவனர்கள் காவல்புரியுங் கோட்டைவாயிலைக் கடந்து அகநகரை அடைந்-தான்; பல இடங்களின் கண்கொள்ளாக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தான். அம்மகிழ்ச்சியால் தான் சென்ற வேலையை மறந்து, புறஞ்சேரிக்கு மீண்டு-வந்து கவுந்தியிடம் மதுரையின் அழகையும், பாண்-டியன்நீதிமுறையையும் புகழ்ந்து கூறினான்.

மாடலன் சந்திப்பு

கோவலன் மதுரையின் பெருமையைக்

கூறிக்கொண்டிருக்கையில், காவிரிப்பூம்பட்டினத்தின் தென்மேற்குத்திசையில் உள்ள 'தலைச் செங்காடு' என்னும் ஊரினன் ஆகிய மாடலன் என்னும் மறையோன், பொதியமலையை வலஞ்செய்து வணங்கி, கன்னியாகுமரியில் நீராடி மதுரைக்கு வந்தான்; வழிநடைவருத்தம் ஆற்றுதற்குப் புறஞ்சேரியை அடைந்தான். அவன் கோவலனுக்குப் பழைய நண்பன். அதனால், கோவலன் அவனைக்கண்டு வணங்கினான். கோவலனையும் கண்ணகியையும் அவ்விடத்தில் கண்ட மாடலன் திடுக்கிட்டு, "அன்ப, மெல்லியலாளாகிய இவளுடன் நீ இங்கு வந்ததற்குக் காரணம் என்ன? உன்னைப்போன்ற நல்வினையாளர்க்கும் இத்தகைய கொடுந்துன்பம் வரலாமோ!" என்று இரங்கிக் கூறி, கோவலனுடைய கொடைச்சிறப்புக்களை மேலும் கூறலானான்.

மதயானையை அடக்கி மறையவனைக் காத்தது

'அரசனால் சிறப்புப் பெற்ற மாதவி, பெண்குழந்தை பெற்று நீராடியநாளில், அக்குழந்தைக்குப் பெயரிடுவதற்கு மரபின் முதியவர் கூடியபோது, நீ அவர்களிடம், "முற்காலத்தில் எம் குலத்தில் தோன்றிய வணிகன் ஒருவன் வாணிகத்தின் பொருட்டுக்கலத்தில் ஏறிக் கடலில் சென்றான். இடையிரவில் கலம் உடைய, அப் பெருங்கடலில் கரைகாணமல் சில நாள் நீந்திக்கொண்டிருந்தான். அவன் புண்ணியதானம் புரிந்தவனாதலின், மணிமேகலை என்னுந்தெய்வம் அவன்முன் தோன்றி, 'நான் இந்திரன்ஏவலால் இங்கு வாழ்பவள். என் பெயர் மணிமேகலை. உன் அறத்தின் பயனால் உன்னைக் காப்-

பாற்ற வந்தேன். துயரம் ஒழிக' என்று கூறி, தன் விஞ்சையினால் அவனைக் கரைசேர்த்தது. அதுவே எங்கள் குலதெய்வம். ஆதலின் அதன்பெயரையே இக் குழந்தைக்கு இடுதல் வேண்டும்'' என்று கூறினாய். அவ்வாறே அவர் 'மணிமேகலை' என்று பெயரிட்டு மங்கலம் கொண்டாட, நீ யாவர்க்கும் செம்பொன்னை அள்ளி அள்ளிக் கொடுத்தாய்.

'அத் தானம் பெறுவதற்கு விரும்பி, தளர்ந்த யாக்கையையுடைய முதுமறையோன் ஒருவன் கோலை யூன்றிக்கொண்டு தள்ளாடி நடந்து வந்தான். வருகையில், மதவெறி கொண்டு பாகனை மீறி வந்த யானை, அக் கிழமறையவனைத் துதிக்கையால் வளைத்து எடுத்தது. அவனது கூக்குரலைக் கேட்ட நீ விரைந்து ஓடிச்சென்று யானையை அதட்டி அதன் கையில் அகப்பட்ட மறையவனை விடுவித்து, அதன் மருப்பினைப் பற்றிப் பிடரின்மேல் ஏறி அமர்ந்து அம் மதயானையின் வலியை அடக்கினாய்; எமன்வாயிலிருந்து மீண்ட அக் கிழப்பார்ப்பனனுக்கு வேண்டிய அளவு பொன்னைக் கொடுத்து விடுத்தாய். அதுகண்ட அனைவரும் உன் வீரத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

கீரியைக் கொன்ற பார்ப்பனிக்கு உதவியது

'காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பார்ப்பனி ஒருத்தி மகப்பேறு இல்லாமையால் கீரி ஒன்றைக் குழந்தைபோல் அன்புடன் வளர்த்துவந்தாள். பின்னர் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

அவள், கீரிப்பிள்ளையையும் தன் பிள்ளையையும் வளர்த்துவருங் காலத்தில் ஒருநாள், பிள்ளையைத் தொட்டிலில் கிடத்திவிட்டு, மறையோன் வீட்டில் இல்லாமையால் கீரியைக் காவல்வைத்துத் தண்ணீர் கொண்டு வர வெளியே சென்றாள்.

'அப்போது, தொட்டிலில் படுத்துறங்கிய பிள்ளையின் அருகே ஓர்அரவம் சீறிவருவதைக் கண்ட கீரி வெகுண்டு ஓடிச்சென்று அப்பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டு இரத்தம் தோய்ந்த வாயுடன் வாயிலில் வந்தது. தண்ணீர்க்குடத்தைச் சுமந்து வந்த பார்ப்பனி, கீரியின் வாயில் இரத்தத்தைக்கண்டு, அது தன் குழந்தையைக் கடித்துவிட்டு வருகிறதென்று கருதி, பதறித் தண்ணீர்க்குடத்தை அதன் தலைமேல் போட்டாள். உடனே கீரி மாய்ந்தது. உள்ளே சென்ற பார்ப்பனி, குழந்தை தொட்டிலில் உறங்குவதையும், பக்கத்தில் பாம்பு கொல்லப் பட்டிருப்பதையும் பார்த்து, அருமையுடன் வளர்த்த கீரியை ஆத்திரத்தில் ஆராயாமல் கொன்ற தன் செயலுக்கு மிகவருந்தி அழுதுபுலம்பினாள்.

'அதை யறிந்த அவள்கணவன் அக் கொலைப்பாவந்தீர்ப்பதற்குக் கங்கையில் நீராட வடதிசை நோக்கிப் புறப்பட்டான். அவன்மனைவியும் பின் தொடர்ந்தாள். அவன் அவளைநோக்கி, "பாவியாகிய உன்கையில் இனி உணவுகொள்ளேன்" என்று கடிந்து உரைத்து, அச்செய்தியை வடமொழியில் எழுதிய ஓர்ஏட்டை அவள்கையில் கொடுத்து, "இதனைக் கடமை அறிந்த நன்மக்கள்-

கையில் கொடு. அவர்கள் உன்பாவம் போக்குவார்கள்" என்று கூறிச் சென்றான்.

'அந்த ஏட்டைக் கையில் கொண்ட பார்ப்பனி வணிகர்வீதியிலும் பிறவீதிகளிலும் சென்று, "இந்த ஏட்டைப் படித்துப் பார்த்து என்பாவத்தைப்போக்கிப் புண்ணியங்கொள்வீராக" என்று கூறிக் கொண்டே திரிந்தாள். நீ அந்தப் பார்ப்பனியை அழைத்து அவள்குறை கேட்டு அந்த ஏட்டை வாங்கிப் படித்துப்பார்த்து அவளைத் தேற்றி, அவள் செய்த கொலைப்பாவம் தீரும்வண்ணம் முறைப்படி அறம்பல புரிந்தாய். அன்றியும், காட்டுவழியே சென்ற அவள்கணவனையும் வரவழைத்து அவ்விருவரும் வாழ்வதற்கு வேண்டும் பெரும்பொருளையும் கொடுத்து உதவினாய்.

நரகன்உயிர்க்கு நல்லுயிர் கொடுக்கத் துணிந்தது

'காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கற்புடைய மங்கை ஒருத்தியை "ஒழுக்கம் கெட்டவள்" என்று கீழ்மகன் ஒருவன் அவள்கணவனிடம் பொய்ச்சான்று கூறினான். அப்போது, பொய்க்கரியாளரைப் புடைத்து உண்ணும் சதுக்கப்பூதத்தின் கைப்பாசம் அக் கீழ்மகனைக் கட்டி இழுத்துச் சென்றது. அதைக் கண்ட அவன் தாய், தன்ஒருமகனை இழப்பதற்கு ஆற்றாமல் அலறி அழுதாள். அவ் வழுகுரல் கேட்டு இரக்கங்கொண்ட நீ, அப்பாசத்தில் புகுந்து, "பூதத் தலைவனே, உனக்கு உணவாக என் உயிரைக் கொண்டு இந்த ஏழையின் உயிரை விட்டிடுக" என்று வேண்டினாய்.

'பூதம், "நரகன்உயிர்க்கு நல்லுயிர் கொண்டு, பரகதி இழக்கும் பண்பீங் கில்லை. ஆதலால், நீ இவ்வாறு வேண்டாதே" என்றுகூறி உன் எதிரிலேயே அவனைப் புடைத்துத் தின்றது. அதுகண்ட அவன்தாய் பெருந்துன்பமுற்றுப் புலம்பினள். நீ அவள்சோகத்தைப் போக்கி அவள் சாகும்அளவும் பசிப்பிணி தீர்த்துக் காப்பாற்றிவந்தாய்.

'இவ்வாறு இப்பிறப்பில், யான் அறிய நீ செய்தனயாவும் புண்ணியதானங்களாகிய நல்வினையே. உன் துன்பங்கட்குக் காரணம் முற்பிறவியில் செய்த தீவினையாய்த்தான் இருக்கவேண்டும்' என்றுகூறி, மாடலன் வருந்தினன்.

அவற்றைக் கேட்ட கவுந்தியார் கோவலன்குணநலன்களைப் பாராட்டி, அவன்துன்பத்திற்கு இரங்கினர்.

3. மணிமேகலை பசிப்பிணிபோக்கியது

முன்னொருகாலத்தில் சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் மாதவி என்னுங் காதலியோடு மகிழ்ந்து வாழ்ந்துவரும் நாளில் அவள் அழகின் மிக்க ஒரு பெண்மகவைப் பெற்றாள். அப் பெண்பிறந்த பத்தாம்நாளில், கோவலன் தன்குலதெய்வமாகிய மணிமேகலாதெய்வத்தின் பெயரையே அதற்கு இடல் வேண்டும் என்று கூறினான். அவ்வாறே அக் குழந்தைக்கு மணிமேகலை என்னும் பெயர் இடப்பட்டது.

மணிமேகலை ஆடல்பாடல்களில் தேர்ச்சியுற்று வளர்பிறைபோல் வளர்ந்துவரும் நாளில், கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் மதுரை சென்று அங்குக் கொலையுண்டான். அக்கொடுந்துயரைப் பொறுக்கமாட்டாத மாதவி, தன் பொருளை அறச்செயல்கட்குக் கொடுத்துவிட்டுத் துறவுபூண்டாள்; தன் அருமைஇளமகள் மணிமேகலையையும் துறவறநெறியிற் சேர்த்தாள். இருவரும் உலகப்பற்று அற்று, அங்கிருந்ததொரு தவப்பள்ளியில் தங்கிக் காலங்கழித்துவந்தனர்.

மலர்வனஞ் செல்லுதல்

ஒருநாள் மணிமேகலையும், அவள்தோழி சுதமதியும் புத்ததேவனுக்கு மாலைகட்டுதற்கு மலர்பறிக்க நந்தவனம் சென்றனர். அந்த உவவனத்தில்

மணிமேகலை நறுமலர் கொய்துகொண்டிருந்த செய்தியை அறிந்த அரசிளங்குமரனாகிய உதயகுமரன், மணிமேகலையை மணக்குங் கருத்துடையவனாதலின், தன்தேரைச் செலுத்திக்கொண்டு உவவனத்தின் உள்ளே வந்தான். அதனை யறிந்த மணிமேகலை, அங்கிருந்த பளிக்கறையின் உள்ளே சென்று தாழிட்டுக்கொண்டாள். உதயகுமரன் சுதமதியைக் கண்டு, 'மணிமேகலை எங்கே?' என்று வினவினான். சுதமதி மக்கள்யாக்கையின் நிலையாமையையும் இழிவினையும் எடுத்துக்கூறி, 'மணிமேகலை உன்வயப்படாள்' என்று அறிவித்தாள். அவன் 'எப்படியாவது மணிமேகலையை என்கருத்திற்கு இசையுமாறு செய்வேன்' என்று வஞ்சினம் கூறிச் சென்றான்.

மணிமேகலை மணிபல்லவத்தீவை அடைதல்

உதயகுமரன் நீங்கியபின் மணிமேகலை பளிக்கறையினின்று வெளிவந்து சுதமதியுடன் பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஞாயிறு குடதிசையில் மறைந்தது; திங்கள் குணதிசைக் கடலில் தோன்றியது. அங்கு மணிமேகலா தெய்வம் ஒரு மானிடப்பெண்போல் தோன்றி, "உதயகுமரன் வெளியே காத்திருக்கின்றான். நீங்கள் இப்போது புறத்துப்போதல் தகாது. அருகிலுள்ள சக்கரவாளக்கோட்டத்தை அடைந்தால் அங்கு யாரும் அணுகார்" என்றுகூறி, அக் கோட்டத்தின் வரலாற்றை உரைக்கும்போது, சுதமதி கண்ணயர்ந்துவிட்டாள். அத்தெய்வம் உடனே மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு வான்வழியே

விரைந்து சென்று 'மணிபல்லவம்' என்னுந் தீவில் கடற்கரையருகிலுள்ள ஒரு சோலையில் வைத்து-விட்டு மறைந்தது. அப்போது மணிமேகலை உறங்-கிக்கொண்டிருந்தாள். மணிமேகலை விழித்தெழுந்த-போது, தான் பண்டு கண்டறியாததொரு கடற்-கரையையும், சோலையையும், வாவிகளையும் கண்-டாள்; சுதமதியைக் கண்டிலள்; அச்சோலையில் பல இடங்களில் தேடியும் அவளைக் காணுமையால் வருந்-தினுள். அப்போது அவள்கண்ணெதிரே புத்த-பீடிகை தோன்றியது. புத்ததேவன் திருவடியைக் கண்ட மணிமேகலை, அதனை மும்முறை வலம்வந்து வணங்கிநின்ருள்; வணங்கியவுடன் தன் முற்பிறப்பு-வரலாறுமுழுதும் தெற்றென வுணர்ந்தாள்.

அவ்வேளையில் மணிமேகலாதெய்வம் அங்குத் தோன்றிப் புத்தன்அடிமலர்களை வாழ்த்தி, மணி-மேகலையைப் பார்த்து, "நீ உலகில் பெரிய அற-நெறிகளை வளர்க்கவேண்டியவளாதலின் உன்நலங்-கருதியே உன்னை இங்கு எடுத்துவந்தேன். கவ-லற்க" என்று கூறி, வான்வழிச் செல்வதற்கும், வேற்றுருக் கொள்வதற்கும், பசியின்றி இருப்பதற்-கும் உரிய மூன்று மந்திரங்களை அவளுக்கு உரைத்து, வான்வழிச் சென்றது.

அமுதசுரபியை அடைதல்

மணிமேகலாதெய்வம் நீங்கிய பின்னர், மணி-மேகலை அத் தீவில்உள்ள மணற்குன்றுகளையும் மலர்ப்பொய்கைகளையும் பூஞ்சோலைகளையும் கண்டு கண்டு களித்தாள். அப்போது தெய்வவொளியுடன்

விளங்கிய தீவதிலகைஎன்பவள் மணிமேகலையின் முன் தோன்றி, "கப்பல் கவிழ்ந்ததனுல் இத் தீவை-யடைந்த மகளிர்போல் இங்கு வந்துள்ள நீ யார்?" என்று கேட்டாள்.

அதுகேட்ட மணிமேகலை "நான் காவிரிப்பூம்-பட்டினத்தில் உள்ள மாதவியின் மகள். என்பெயர் மணிமேகலை யென்பது. என்னைக் காவிரிப்பூம்பட்-டினத்தில் உள்ள உவவனத்திலிருந்து மணிமேகலா-தெய்வம் இங்குக் கொண்டுவந்து வைத்தது. யான் இப் பீடிகையைக் கண்டு முற்பிறப்பை உணர்ந்-தேன்" என்று கூறினுள்.

அதுகேட்ட தீவதிலகை "நான் இந்திரன்-ஏவலால் இத் தருமபீடிகையைக் காத்துக்கொண்-டிருப்பவள். புத்ததேவர் அருளிய நன்னெறியில் நடப்பவர் இதனைக் காண்பாராயின் தம் முற்பிறப்பு-உணர்ச்சியை அடைவர். அத்தகையோர் உலகத்-தில் மிகச்சிலரேயாவர். அவர்களுக்கே அறநெறி உரியதாகும். நீ மிகச்சிறந்த நற்குணவதியாதலின் இப் பீடிகையைக் கண்டு பழம்பிறப்பை உணர்ந்தாய். இந்தப் பீடிகைக்கு எதிரில் குவளையும் நெய்தலும் செறிந்துள்ள கோமுகியென்னும் பொய்கை ஒன்று உளது. ஆண்டுதோறும், புத்தர் பிறந்த நன்னுளா-கிய வைகாசிமாதத்து விசாகமும் பௌர்ணமியும் கூடும் நாளில் அமுதசுரபிஎன்னும் அட்சயபாத்திரம் அப்பொய்கையின் உள்ளிருந்து மேலே வந்து தோன்றும். அந்நாளும் இன்றே. அது தோன்-றும் வேளையும் இதுவே. இப்போது அப்பாத்திரம்

உன்கையில் வரும். அப் பாத்திரத்தில் இடப்பட்ட ஆருயிர்மருந்தாகிய உணவு, எடுக்க எடுக்கக் குறை-யாது. அதன் வரலாற்றை உங்கள்ஊரில் உள்ள அறவணஅடிகளிடம் கேட்டறிவாய்'' என்று கூறினள்.

உடனே மணிமேகலை புத்தபீடிகையை வணங்கித் தீவதிலகையோடு சென்று கோமுகியை-யடைந்து வலம்வந்து நின்றாள். அங்கு 'அமுத-சுரபி' பொய்கையினுள்ளேயிருந்து மேலே வந்து மணிமேகலையின் கையை அடைந்தது. அப்போது மணிமேகலை மட்டற்ற மகிழ்ச்சியுடன் புத்ததேவ-ரைத் துதித்தாள்.

பசிப்பிணியின் கொடுமை

பின்னர், மணிமேகலையை நோக்கித் தீவ-திலகை கூறுவாள்: *''பசிநோயானது ஒருவரது குடிப்பிறப்பையும் மேன்மையையும் அழிக்கும்; நாணமென்னும் சிறந்த அணியைப் போக்கும்; அழகைச் சிதைக்கும்; மாதரோடு பிறர்புறங்கடை-யில் நிற்கச்செய்யும்.''

பசிப்பிணிஎன்னும் பாவி மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம் தவம் உயர்ச்சி

---

* குடிப்பிறப்பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண் அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண் அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்.

தாளாண்மை காதல் இவற்றைப் போக்கிவிடும்.

"முன்னொருகாலத்தில் மழையே இல்லாமையால் புல்லும்மரமும் புகைந்து கரிய, உயிர்களெல்லாம் உணவின்றிப் பசியால் வாடியபோது, அருமறை அந்தணனாகிய கோசிகன் எங்கும் திரிந்து உணவு கிடைக்கப்பெறாமல் நொந்து, தனக்குக் கிடைத்த நாயின் இறைச்சியைத் தின்னத் தொடங்கி, முதலில் அவ் விறைச்சியின் ஒரு பகுதியைத் தேவர்க்குப் பலியிட்டான் என்னுஞ் செய்தியை நீயும் கேட்டிருப்பாயன்றோ?

"கைம்மாறு செய்யக் கூடியவர்களுக்குப் பொருள் கொடுப்பவர்கள் அறத்தை விலைக்குவிற்று ஊதியம் பெறும் வணிகரேயாவர். ஏழைகளின் பசியைத் தீர்ப்பவர்களே உண்மையான அறஞ்செய்பவர்க ளாவர். அவர்கள்பெருமையை என்னால் அளவிட்டுக் கூற முடியாது.

"'மண்திணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம், உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே.' ஆதலால், பசியைப் போக்கி உயிரைக் கொடுக்கும் உயர்ந்தஅறத்தினை மேற்கொண்டு நீ நீடுவாழ்க" என்றுகூறினாள். அதுகேட்டமணிமேகலை, "சென்ற பிறப்பில் என் கணவனாகிய இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பினால் இறந்தது பொறாமல், யான் தீப்பாய்ந்து வெந்து உயிர்நீங்குஞ் சமயத்தில், முன்னொருநாளில் உச்சிவேளையில் பசியால் வாடிவந்த சாதுசக்கரன் என்னும் முனிவனுடைய பசி-

யைப் போக்கியதுபோல் கனுமயக்குற்றேன். இறக்கும்போது உண்டான அந்தக் கனவைப்போன்ற நினைப்பின் பயனாலேயே ஆருயிர்மருந்தாகிய இவ்வுணவுப்பாத்திரம் என் கையில் வந்தது என்று கருதுகின்றேன்.

"இந் நாவலந்தீவில், கிழிந்த துணிகளை யுடுத்துப் பசியால் மெலிந்து வெயிலென்று வெறுக்காமலும், மழை என்று மயங்காமலும் சென்று, செல்வத்தையுடையோர்கள்வீட்டின் தலைவாயிலில் துன்பத்துடன்நின்று பிச்சை கேட்டு, ஓரிடத்திலும் நில்லாமல், முற்பிறப்பிற் செய்த தீவினை அலைப்ப உழல்வோர் பலராவர். ஆதலின் பெற்ற குழந்தையின் முகங் கண்டு இரங்கிப் பால்நினைந்து ஊட்டுந் தாயைப்போல், இப்பாத்திரத்தில் இட்ட பசிப்பிணி மருந்தாகியஉணவு அவ் வேழைகளின் முகங் கண்டு சுரப்பதைக் காணும் விருப்பம் உடையேன்" என்று கூறினள்.

அதுகேட்ட தீவதிலகை அவளை நோக்கி "மணிமேகலை, அதன் தன்மை யொன்றைக் கூற மறந்தேன். நீ எடுத்துக் கூறினய். அறமே சான்ருக அருளோடு பிறருக்கு அளிக்குஞ் சிறப்புடையோர்க்குத்தான் அமுதசுரபியில் உணவு சுரக்கும். மற்றையோர்க்குச் சுரவாது. நீ பிறர்க்கு அருளோடு உண்பிக்கும் அறம்நிறைந்த உள்ளத்தள் ஆயினய். அவ்வறத்தின் பயனும் அறிந்தாய். ஆதலின், உன் ஊருக்குப் போய் அறஞ்செய்" என்ருள்.

புகார்நகர் அடைதல்

உடனே மணிமேகலை தீவதிலகையை வணங்கி, புத்தபீடிகையை வலம்புரிந்து தொழுது, அமுதசுரபியை அங்கையில் ஏந்தி வானவீதியில் வரலாயினள். மாதவி தன்மகள் வரவில்லையே என்று கவலைப்பட்டுச் சுதமதியுடன் வருந்திக்கொண்டிருந்தாள். அவ்வருத்தம் நீங்குமாறு மணிமேகலை அவர்கள்எதிரில் வந்து தோன்றினள். அவள் தான் கண்ட அற்புதங்களைக் கூறினள்; புத்தபீடிகையால் தான் உணர்ந்த பழம்பிறப்பின் வரலாறுகளைத் தெரிவித்தாள்; அப்பிறப்பில் அவ்விருவரும் இரவிவன்மன் மக்களாகிய தாரையும் வீரையுமாகி, துச்சயன் என்பவனுக்கு மனைவியர்களாய் இருந்ததையும், தான் அவர்களுக்குத் தங்கையாய்ப் பிறந்ததையும் கூறினள்; தன் கையிலுள்ள பாத்திரத்தின் பெருமையையும் உரைத்தாள். பின்னர், மூவரும் அறவணஅடிகளை வணங்குதற்குச் சென்றனர்.

அறவணர் அருள்உரை

மணிமேகலை முதலிய மூவரும் அறவணஅடிகள் இருக்குமிடத்தை அடைந்து அவருடைய திருவடிகளில் மும்முறை பணிந்து தொழுதனர். பின்னர் மணிமேகலை தான் மணிபல்லவம் அடைந்ததும், பழம்பிறப் புணர்ந்ததும், அமுதசுரபியை அடைந்ததும், அதன் வரலாற்றை அறவணரிடம் அறியுமாறு தீவதிலகை கூறியதும் பிறவும் அவரிடம் கூறினள். அதுகேட்ட அறவணர் மாதவி சுதமதி இவர்களின் முற்பிறப்பும் முடிவும் கூறி, மணிமேகலையை நோக்கி, "இவ்வுலகில் பௌத்த-

அறங்கள் குறைந்து பாவங்கள் மிகுந்தன. சிறிது சிறிதாவது அறத்தை வளர்க்கக்கூடுமென்று நான் அறத்தை உரைத்து வருகின்றேன். இவ் வுலகமாந்தர் அதனை அறிகிலர். புத்தர் பிறக்குங்காலத்து உலகில் எல்லா நலங்களும் உண்டாகும். உன்னால் இவ்வூரில் சில விசேடங்கள் நிகழும். அவை நிகழ்ந்தபின்தான் என் அறவுரைகள் உன்மனத்திற் பொருந்தும்.

"ஆருயிர்மருந்தாகிய அமுதசுரபியென்னும் பாத்திரம் பெற்ற மடக்கொடியே, மக்கள் தேவர் என்னும் இருதிறத்தார்க்கும் ஒப்ப முடிந்ததொரு பேறறம் ஏழைகளின் பசிப்பிணியைப் போக்குதலே ஆகும்" என்று அறவணஅடிகள் கூறினர். உடனே மணிமேகலை, "அப்படியே ஏழைகட்கு உண்டி யளிக்கும் பணி செய்வேன்" என்று கூறினள்.

ஆபுத்திரன் ஏழைகளின் பசிப்பிணிபோக்கியது

பின்னர் அறவணஅடிகள் மணிமேகலையைப் பார்த்து, "இந்த அமுதசுரபியைத் தன் கையில் கொண்டு ஏழைமக்களின் பசிப்பிணி போக்கியவன் ஆபுத்திரன் என்பவன். அவன் மதுரையம் பதியில் சிந்தாதேவியின் கோயில்அம்பலத்தில் தங்கி, வீடுதோறுஞ் சென்று பிச்சையேற்று,

"காணார் கேளார் கால்முடம் பட்டோர்
பேணுநர்இல்லோர் பிணிநடுக்குற்றோர்
யாவரும் வருக"

என்று கூறி, எல்லார்க்கும் உணவை யளித்து அவர் உண்டு மிகுந்ததைத் தான் உண்டு, பிச்சையோட்டையே தலையணையாகக்கொண்டு அவ்வம்பலத்தில் உறங்கிக் காலங்கழித்துவந்தான்.

அமுதசுரபி

"அவன் ஒருநாளிரவில் அம்பலத்தில் உறங்கும்பொழுது வேற்றூரிலிருந்து வந்தசிலர் அவனை எழுப்பி, 'பெரும்பசி எங்களை வருத்துகின்றது' என்றனர். அந்நேரத்தில் அவர்கள்பசியைப் போக்கும் வகை யறியாது ஆபுத்திரன் வருந்தினன். அப்போது சிந்தாதேவி எழுந்தருளிவந்து, 'இப் பாத்திரத்தைக் கொள்க. நாடு வறங்கூரினும் இவ்வோடு வறங்கூராது. எடுக்க எடுக்க உணவு இதில் வளர்ந்துகொண்டேயிருக்கும்' என்று கூறி, தன் கையி லிருந்த அமுதசுரபியை அவன்கையில் கொடுத்தாள்.

"ஆபுத்திரன் தேவியை வணங்கி அப் பாத்திரத்தைப் பெற்று, பசியால் வருந்தி வந்தவர் அனைவர்க்கும் உணவளித்தான். நாள்தோறும் எல்லாவுயிர்கட்கும் பசிப்பிணிமருத்துவனாய் விளங்கி உணவளித்துவந்தான். மனிதர்கள் அவனைச் சூழ்ந்தனர்; மாக்களும் பறவைகளும் அன்புடன் வளைந்து கொண்டன.

துறக்கம் வேண்டாமை

"ஆபுத்திரனுடைய புண்ணிய மிகுதியை அறிந்த இந்திரன் ஒரு முதிய வேதியனாய் வந்து

ஆபுத்திரனைப் பார்த்து, 'உன்புண்ணியத்தின் பயனைக் கொள்க' என்றான். ஆபுத்திரன் அவனை நகையாடி, 'உம் தேவருலகில், இங்கேசெய்த நல்வினைப்பயனை நுகர்பவர்களைத் தவிர, அறம்புரிவோர், உயிர்களைக் காப்பாற்றுவோர், தவம்புரிவோர், பற்றறுக்க முயல்வோர் ஒருவரும் இலர். வருந்தி வந்தோருடைய அரும்பசியைக் களைந்து, அவர்களுடைய இனிய முகத்தைக் காணுமாறு செய்கின்ற எனது தெய்வப்பாத்திரம்ஒன்றே எனக்குப் போதும். வேறுஒன்றும் வேண்டுவதில்லை' என்று அவனை மதியாது கூறினான்.

"அதுகேட்ட இந்திரன் வெகுண்டு பன்னிரண்டு ஆண்டு மழையின்றியிருந்த பாண்டியநாடு எங்கும் பெருமழை பெய்வித்து, பசித்துவருவோர் இல்லாதபடி செய்துவிட்டான். ஆபுத்திரன் அம்பலம்விட்டு வெளிச்சென்று, 'பசித்தவர் யாரேனும் உளரோ!' என்று வினவிக்கொண்டே போனான். செல்வக்களிப்பால் அனைவரும் அவனை இகழ்ந்தனர்.

அமுதசுரபியைக் கோமுகியில் விடுதல்

"அப்போது கப்பலில் வந்திறங்கிய சிலர், 'சாவகநாட்டில் மழை யின்மையின் மக்கள் பலர் பட்டினியால் மாண்டனர்' என்று கூறக் கேட்ட ஆபுத்திரன், அந்நாட்டிற்குச் சென்று பசிப்பிணியைப் போக்க நினைத்து, ஒருகப்பலில் ஏறிப் புறப்பட்டான். அக் கப்பல் மணிபல்லவத்தீவின் அருகே ஒருநாள் தங்கியது. ஆபுத்திரன் யாருமில்லாத அத்தீவில் இறங்கினான். அவன் அக் கப்பலில் ஏறிவிட்-

டான் என்று எண்ணி மீகாமன் இருளில் கப்பலைச் செலுத்திக்கொண்டு போய்விட்டான்.

"பின்னர், ஆபுத்திரன் பெரிது வருந்தினன். 'பலருடைய பசிப்பிணியைப் போக்கும் இந்த அமுதசுரபியில் கிடைக்கும் உணவை நான்மட்டும் உண்டு உயிர் வாழ்ந்திரேன்' என்று கூறி, அப்-பாத்திரத்தைத் தொழுது, 'ஆண்டிற் கொருமுறை தோன்றுக. அருளோடு அறம்புரிவோர் எவரே-னும் வரின் அவர்கையில் புகுக' என்று உரைத்துக் கோமுகியென்னும் பொய்கையில் அதை விட்டு, உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தான். அப்-புண்ணியத்தின் பயனால் சாவகநாட்டரசனுக்கு மகனாய்ப் பிறந்து அரசாளுகின்றான்.

"காவிரியாறு நீர்பெருகி வளமுறச்செய்தும், எக்காரணத்தாலோ உயிர்கள் வறுமையால் வருந்து-கின்றன. தேவர்கள் உண்டு மிகுந்த அமுதத்தைப் பயன்படுத்தாது வைத்ததுபோல், வறட்சிமிக்க உல-கத்தின் பெரிய துன்பத்தைப் போக்கவல்ல இந்த அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் வாளாவைத்-திருப்பது தகுதியன்று" என்று அறிவுறுத்தினர்.

பாத்திரம் கொண்டு பிச்சைபுக்கது

அறவண அடிகள் கூறியதைக் கேட்ட மணி-மேகலை அவரை வணங்கிப் புத்தமதப் பிக்குணி-வேடந் தாங்கிப் பாத்திரத்துடன் பெருந்தெருவினை அடைந்தாள். பேரழகியும் இளமைப்பருவம் உடை-யவளுமான அவள் சந்நியாசினிவேடங் கொண்-

டதை யறிந்த நகரமாந்தர், துயருற்று அவளைச் சூழ்ந்தனர். "கற்புடையமாதர் இடும் அன்னத்தையே முதலில் ஏற்றுக்கொள்ளல் தகுதி" என்று மணிமேகலை கூற, அவளுடனிருந்த காயசண்டிகை, "மழையைத் தருங் கற்புடைய மங்கையரில் மேம்பட்ட ஆதிரையின் வீடு இது. அவளிடம் முதலில் ஐயம் ஏற்கலாம்" என்று கூறினள்.

ஆதிரை பிச்சையிட்டது

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சாதுவன்என்னும் வணிகனுடைய மனைவி ஆதிரை. அவ் வணிகன் பொருளை யிழந்து வறுமையுற்று, வேறுதேசஞ் சென்று பொருளீட்டக் கருதிக் கப்பலில்சென்றபோது கப்பல் உடைந்துவிட்டது. உடைந்த மரத்துண்டைப் பற்றிக்கொண்டு நீந்திக் கரைசேர்ந்தவர்களுட் சிலர் காவிரிப்பூம்பட்டினம் அடைந்தனர். சாதுவன் வாராதது கண்ட ஆதிரை, அவன் இறந்துவிட்டான் என்று வந்தவர்கள் கூற, கேட்டு, தானும் இறக்கத்துணிந்து தீமூட்டி அதில் இறங்கினள். அவளைத் தீச் சுடவில்லை. அப்போது ஆகாயவாணி, "உன் கணவன் உயிரோடிருக்கின்றான். உன்னை வந்தடைவான்" என்றது. அதுகேட்ட ஆதிரை வருத்தம் நீங்கி வீட்டை அடைந்து அறம்புரிந்துவந்தாள்.

சாதுவன் வரவு

சாதுவன் ஒரு மரத்துண்டைப் பற்றிக்கொண்டு நாகர்தீவை அடைந்தான். நாகர்கள் அவனைத் தம் தலைவனிடம் கொண்டு சென்றனர். சாது-

வன் நாகர்மொழி பேசத் தெரிந்தவனுதலால் அவனிடம் அம் மொழியில் பேசினுன். மது அருந்துதலும், கொலை செய்தலும், புலால் உண்ணுதலும் பாவச்செயல்கள் என்று கூறி, அவர்களை நல்வழியில் திருப்பினுன். நாகர்தலைவன் மகிழ்ந்து, சாதுவனுக்குப் பல பொருள்களைக் கொடுத்து, அங்கு வந்த சந்திரதத்தனுடைய கப்பலில் ஏற்றி அனுப்பினுன்.

தன்னகர் வந்து சேர்ந்த சாதுவன் கற்பிற்சிறந்த ஆதிரையோடு அறம்பல புரிந்துவந்தான். அத்தகைய மேம்பாட்டினையுடைய ஆதிரையின்கையால் முதலில் பிச்சைவாங்குதல் நலம் என்று கருதிய மணிமேகலை ஆதிரையின் வீட்டை யடைந்து, 'புனையா ஓவியம் போல்' வாய்பேசாது நின்ருள். ஆதிரை அமுதசுரபியைத் தொழுது மணிமேகலையை வலம்வந்து, 'பசிப்பிணி நீங்குக!' என்று கூறி, அப்பாத்திரம் நிறைய உயிர்மருந்தாகிய உணவை இட்டனள்.

காயசண்டிகையின் தீராப்பசியைப் போக்குதல்

ஆதிரை யளித்த உணவுப்பொருளை முதலில் ஏற்றதனுல் அமுதசுரபியில் உள்ள சோறு, நல்ல வழியில் தேடிய பொருள் வழங்குந்தோறும் குறையாமல் வளர்வதுபோல எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்தது; ஏற்போர்பசியைப் போக்கி விளங்கியது. அதுகண்ட காயசண்டிகை, மணிமேகலையை வணங்கி, "அன்னையே, என்னுடைய தீராப்பசியையும் தீர்த்தருள்க" என்று வேண்டிநின்ருள்.

உடனே மணிமேகலை அமுதசுரபியிலிருந்து ஒருபிடியமுதை யெடுத்து அவள்கையில் இட்டாள். அதனை யுண்டதும் காயசண்டிகையின் தீராப்பசி தீர்ந்தது. அதனால் மகிழ்ந்த அவள் தன்வரலாற்றை உரைப்பாளாயினள்.

காயசண்டிகையின் பசிக்குக் காரணம்

"வடதிசையி லுள்ள விஞ்சையருலகத்தில் காஞ்சனபுரத்திலிருந்து, தென்திசையி லுள்ள பொதியமலையைக் காண்பதற்கு என் கணவனாகிய காஞ்சனனும் யானும் வான்வழியே வந்தோம்; ஒரு காட்டாற்றின் கரையில் தங்கினோம். அங்கு விருச்சிகன் என்னும் முனிவன் தேக்கிலையில் பனங்கனிபோன்ற நாவற்பழத்தை வைத்துவிட்டு நீராடச் சென்றிருந்தான். யான் அப் பழத்தை அறியாது காலாற் சிதைத்துக் கெடுத்தேன். நீராடிவந்த முனிவன் வெகுண்டு, 'பன்னிரண்டு ஆண்டிற் கொருமுறை பழுக்கும் ஒரே பழத்தை உண்பவர் பன்னீராண்டு பசியின்றி யிருப்பர். யான் பன்னீராண்டு தவம்புரிந்து ஒருநாள் உண்ணும் விரதம் உடையவன். உண்ணும் நாளாகிய இன்று இக்கனியை நீ அழித்துவிட்டாய். அதனால், நீ வான்வழிச்செல்லும் மந்திரம் இழந்து, யானைத்தீ என்னும் நோயால் பன்னீராண்டு பசியால் வருந்தி, அடுத்தமுறை இக்கனியை யான் உண்ணும்போது பசிதீர்வாய்" என்று கூறிப் போனான். அன்றுமுதல் தீராப்பசியால் வருந்திக்கொண்டிருந்தேன். என் கணவன் இவ்வூரில் என்னை விட்டுச் சென்று, ஆண்டுதோறும் இந்திரவிழா நிகழும் போது வந்து என்னைக் கண்டு

வருந்திச் செல்வான். தணியாத கொடும்பசியை நீ தணித்தாய். இனி என் பதி செல்வேன். சக்கர-வாளக்கோட்டத்தில் உலகஅறவி என்னும் அம்பலம் ஒன்று உளது. அங்கு ஊர் ஊராகச் சென்று பசியினல் துன்புற்றோரும், திக்கில்லாதாரும், நோயுற்றோரும் ஆகிய ஏழைமக்கள் உணவளிப்-போரை எதிர்பார்த்திருப்பர். அங்குச் சென்று அவர்பசிப்பிணி நீக்குக'' என்று கூறி, அவள் தன் ஊருக்குச் சென்றுள்.

உலகஅறவியை அடைந்து அறம் புரிதல்

பின்னர் மணிமேகலை உலகஅறவியை அடைந்து மும்முறை வலங்கொண்டு பணிந்து அதில் ஏறிச் சம்பாபதியையும் கந்தில்பாவையையும் வணங்கி, வெயிலால் வருந்திய பயிர்களுக்கு மேகம் தோன்றியதுபோல அமுதசுரபியோடிருந்து, ''இது ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி. உணவு வேண்டுவோர் யாவரும் வருக'' என்று கூறினுள். வறுமையால் வாடிப் பசியால் மெலிந்து நோயால் நலிந்த அனைவரும் திரண்டு வந்து மணிமேகலை அளித்த உணவை யருந்திப் பசிதீர்ந்து மகிழ்ந்தனர். அவ் வம்பலத்தில் உண்ணும் மக்களது ஆரவாரம் மிக்கது.

சிறைச்சாலையை அறச்சாலை ஆக்கியது

உதயகுமாரன் அடிக்கடி வந்து தன்னை மணக்க விரும்புவதை யறிந்த மணிமேகலை காய-சண்டிகையின் உருவங் கொண்டு பல இடங்களில் சென்று ஏழைகள்பசிப்பிணியைப் போக்கினுள்;

ஒருநாள் அவள் அந்நகரத்துச் சிறைச்சாலையில் இருந்த குற்றவாளிகள்எல்லாருக்கும் உணவளித்தாள். அதைக் கேள்வியுற்ற அரசன் அவளை வருவித்து அமுதசுரபியின் பெருமையை அறிந்து, அவள்விருப்பத்தின்படி சிறைக்கோட்டத்தை அழித்து அறக்கோட்ட மாக்கி அங்குப் பலவகை அறங்களும் நடக்குமாறு செய்தான். இவ்வாறு பசிப்பிணிக்கு மருந்தாகி விளங்கிய மணிமேகலை பலஅற்புதங்களை நிகழ்த்தி, இறுதியில் தவம்புரிந்து துறக்கம் அடைந்தாள்.

[பெண்பிறப்பிற் பிறந்து, தொண்டாற்றும் உள்ளத்துடன் இளமையிலேயே துறவுபூண்டு, ஏழைமக்களின் பசிப்பிணியைப் போக்குதலே தன் வாழ்க்கைக்குறிக்கோளாகக்கொண்டிருந்த மணிமேகலையின் வரலாறு, அந்நாளில் பெண்மக்கள் நாட்டுக்குப் புரிந்த சிறந்த தொண்டினையும், தியாகத்தையும் விளக்குவதனோடு, இக்காலத்தில் வாழும் நமக்குப் பெருமையும் ஊக்கமும் தருவதாகும்.]

4. வாசவதத்தை திருமணம்

உதயணன் தோற்றம்

இந்தியநாட்டில் வடபகுதியில் உள்ள வத்தவ நாட்டில் கௌசாம்பி என்னும் நகரத்தில் குருகுலத்தில் தோன்றிய சதானிகன் என்னும் அரசன் ஆட்சி புரிந்துவந்தான். அவன் சேதிநாட்டரசனுகிய சேடகன் என்பவன்மகளாகிய மிருகாவதியை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தான்.

இருவரும் மனங்கலந்து வாழ்ந்து வருங்காலத்தில் மிருகாவதியின் கருவில் புண்ணியம் நிறைந்த தேவன் ஒருவன் வந்து தங்கினுன். ஒருநாள் இரவில் மிருகாவதி தான் இருக்கும் மேல்மாளிகையின் இடமெல்லாம் செந்நிறப் பொருள்களால் அணிசெய்வித்துச் சிவந்த மலர்களையும் அணிகளையும் அணிந்துகொண்டு தோழிகளையும் அவ்வாறு அணிந்துகொள்ளச் செய்து அவர்களிடையே நிலாமுற்றத்தில் ஒரு மஞ்சத்தில் செம்பட்டாடையைப் போர்த்துக்கொண்டு உறங்கலானுள்.

அப்போது வானத்தில் பறந்துசென்ற ஒரு சரபப் பறவை மிருகாவதியைக் கண்டு ஈரம் புலராத தசைத்தொகுதியென்று கருதி மஞ்சத்துடன் தூக்கிக்கொண்டு பறந்து சென்று, விபுலகிரியில் மிருகாவதியின் தந்தையாகிய சேடகமுனிவன் தவம்புரியும்

பள்ளியின் அருகே வைத்து உண்ணத்தொடங்கும்போது அவள் விழித்துக்கொண்டாள். அவளைக் கண்ட அப் பறவை 'இது இறைச்சித் தொகுதியன்று; உயிரோடுள்ள ஒருபெண் வடிவம்' என்றறிந்து அஞ்சிப் பறந்தோடிச் சென்றது.

மிருகாவதி நாற்புறத்திலும் பார்த்துத் தான் தனித்து வேறிடத்தில் வந்திருப்பதை யறிந்து திகைத்து அஞ்சி நடுங்கினள். அச்சத்தினலும் வான்வழி வந்த வருத்தத்தினலும் களைப்புற்று, குணகடலில் கதிரவன் தோன்றுங் காலையில், எல்லாக் கோள்களும் நல்வழி நோக்கும் நல்ல வேளையில் ஓர் ஆண்மகவைப் பெற்ருள்.

பெற்ற மகவை அன்புடன் தழுவிய மிருகாவதி அப்போதிருக்குந் தன் எளிய நிலைமையைக் குறித்து வருந்திப் புலம்பினள். அப் புலம்பல்ஒலி அவ்வழியே நீராடச் சென்ற சேடகமுனிவர்செவியிற் கேட்டது. அம் முனிவர் விரைந்துவந்து கண்டு அவள் தம் மகள் என்பதையும், அங்கே நிகழ்ந்தவற்றையும் தம் மெய்யறிவினல் அறிந்து, 'நீ அஞ்சாதே' என்று கூறி, குழந்தையுடன் அவளைத் தம் தவப்பள்ளிக்கு அழைத்துச் சென்று ஆதரித்து வந்தார்.

முனிவர் தம் தந்தை என்பதை யறிந்த மிருகாவதி ஒருவகையில் ஆறுதல் உற்றிருந்தாள். அங்கே தவஞ் செய்துகொண்டிருந்த முனிவர்களுள் தலைமை பெற்ற பிரம சுந்தரமுனிவரும் அவர்-

மனைவி பரமசுந்தரியும் சேடகமுனிவன் விருப்பத்தின்படி மிருகாவதியைக் குழந்தையுடன் காப்பாற்றிவந்தனர்.

சேடகமுனிவர், கதிரவன் உதிக்கும் நேரத்தில் அம்மகன் பிறந்ததனுல் அவனுக்கு 'உதயணன்' என்று பெயரிட்டார். பிரமசுந்தர முனிவர்மகனுகிய 'யூகி' என்பவனுடன் உதயணன் நட்புக் கொண்டு வளர்ந்துவந்தான். பிரமசுந்தரர், சேடகமுனிவர் ஆகிய இருவரிடத்தும் உதயணன் அரசர்க்குரிய கலைகளையும், பிறகலைகளையும் ஊக்கத்துடன் நன்கு கற்றுச் சிறப்புற்றுன்.

கோடபதி

ஒருநாள் பிரமசுந்தர முனிவர் யானையின் வெகுளியை அடக்கி ஆளுதற்குரிய மந்திரம் ஒன்றை உதயணனுக்குக் கற்பித்தார்; இசைப் பயிற்சியும் செய்வித்தார்; இந்திரனுல் தமக்குக் கிடைத்ததும், யானை முதலியவற்றை வசப்படுத்துவதற் குரியதும் ஆகிய கோடபதி என்னும் யாழை வாசிக்க அவனுக்குக் கற்பித்தார். அதை அவன் வாசிக்கக் கேட்ட காட்டுயானைகளும், பறவைகளும், பிறஉயிர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் வந்து அவனுக்கு ஏவல் புரிவதைக் கண்டு மகிழ்ந்த முனிவர் அந்த யாழை அவனுக்கே கொடுத்து, 'நீ இந்த யாழ்க்கலையில் மிக்க தேர்ச்சி யடைக' என வாழ்த்தினுர். தம் மகனுகிய யூகியை உதயணனிடம் அடைக்கலமாகக் கொடுத்தார். யூகியை உயிர்த் துணையாகக் கொண்ட உதயணன் எல்லா வகையி-

லும் மேம்பட்டு விளங்கினன்.

தெய்வயானை

உதயணன் ஒருநாள் காட்டில் சென்றபோது பதினுயிரம் யானைகளின் பலமுள்ள ஒரு தெய்வ-யானை நின்றது. அதனைக் கண்ட உதயணன் மந்-திரத்தை யுன்னிக் கோடபதியை வாசித்தான். அதைக் கேட்ட தெய்வயானை அவனருகே வந்து மிக்க அன்பைக் காட்டி அவன் ஏவிய பணிகளைச் செய்தது. உதயணன் அதன்மேல் ஏறித் தன் இடத்தை யடைந்தான். அன்றுமுதல் அந்த யானை அவனைவிட்டுப் பிரியாமல் ஏவல்புரிந்து வந்தது. ஒருநாளிரவில் அந்த யானை உதயணன்கனவில் தோன்றி, "என்மேல் பாகரை ஏற்றினுலும், என்-னைத் தோல்கயிற்றால் கட்டினுலும், யான் உண்ப-தற்கு முன் நீ உண்டாலும் உன்னைவிட்டு நீங்கு-வேன்" என்று கூறியது. உதயணன் அத் தவறு-கள் நேராதபடி விழிப்பாக இருந்தான்; யானையும் அவனை நீங்காதிருந்தது.

ஆட்சியேற்றல்

சேடகமுனிவர் மகனும் வைசாலி நகரத்தை ஆண்டுவந்தவனுமான விக்கிரன், அரசாட்சியில் வெறுப்புற்றுத் துறவு பூண விரும்பினன்; தனக்கு மக்க ளில்லாமையால் தன் தந்தையிடம் வந்து தன் எண்ணத்தைக் கூறினன். அப்போது அங்கு வந்த உதயணனைக் கண்டு, அவன் தன் தங்கைமகன் என்பதை யறிந்து மகிழ்ந்து யூகியுடன் அவனைத் தன் நகரத்துக்கு அழைத்துச் சென்று தன் ஆட்-

சியை ஒப்படைத்துவிட்டுத் தவவனம் சென்றான். தெய்வயானையும் உதயணனுடன் வைசாலியில் தங்கியிருந்தது. உதயணன் யூகியை முதல்அமைச்சனாக்கி, தன் வீரத்தாலும், யூகியின் உதவியாலும், தெய்வயானையின் ஆற்றலாலும் பல பகைவர்களை வென்று அவர்நாடுகளைத் தன் அடிப்படுத்தி ஆண்டுவந்தான்.

நிலாமுற்றத்தில் உறங்கிய தேவியைக் காணாமல் வருந்திய சதானிகன், ஒருமுனிவரால் நிகழ்ந்த செய்திகளை யறிந்து, வைசாலிக்கு வந்து உதயணனையும் மிருகாவதியையும் கண்டு மகிழ்ந்தான்; மிருகாவதியுடன் கௌசாம்பிக்கு மீண்டான். பின்னர், மிருகாவதிக்குப் பிங்கலன், கடகன் என்னும் இரண்டு பிள்ளைகள் தோன்றினர். சதானிகன் உதயணனிடம் கௌசாம்பிநகர ஆட்சியை ஒப்படைத்துத் துறவறம் பூண்டான். வைசாலியை ஆளும்படி யூகியை விட்டு உதயணன் கௌசாம்பியை ஆண்டுவந்தான். உதயணன் கல்வி, வீரம், ஆட்சிமுறை, வெற்றி இவற்றில் மிக்கவன் என்ற புகழ் எங்கும் பரவியது. உதயணனுக்கு யூகியைத் தவிர வயந்தகன், உருமண்ணுவா, இடவகன் என்னும் மந்திரிகள் மூவர் உயிர்த்துணைவராயிருந்தனர்.

தேவன் உதவி

உதயணன் ஒருநாள் சேனையையும் தெய்வயானையையும் ஊரில் நிறுத்தி உருமண்ணுவா முதலிய சில நண்பர்களுடனும், சில வீரர்களுடனும் ஒருகாட்டில் சென்று வேட்டையாடிக் களைப்புற்று

நீர்வேட்கையால் மயங்கி வருந்தினன். அவனும் தோழர்களும் ஒரு புரச மரத்தின் அடியில் சோர்ந்து மயங்கிக் கிடந்தனர்.

அங்கு அழகுடன் விளங்கிய ஓர் இளைஞன் தோன்றினன். அவன் உதயணன்முதலியோர்க்கு நன்னீர் கொடுத்து விடாய் தணித்துத் தன் வழியே செல்லத் தொடங்கினன். அப்போது அவனை அவர்கள் நோக்கி 'உம்மை இன்னவர் என்று அறிவிக்க வேண்டும்' என்று வேண்டினர். அவன் 'நான் இயக்கர்களில் ஒருவன். குபேரனுக்குத் தோழன். என்பெயர் நஞ்சுகன். நீங்கள் என்னை நினைத்தபோது வந்து உதவுவேன்' என்று கூறி, தன்னை நினைத்தற்குரிய மந்திரத்தையும் உருமண்ணுவாவிற்குச் சொல்லிச் சென்றான்.

யானை பிரிவு

பின்னர் ஒரு நாள் உதயணன் ஆடல் பாடல்களில் மனம் செலுத்தி மயங்கித் தெய்வயானைக்கு உணவளிக்காமல் முந்தி உண்டான். அந்த யானை உடனே அவனைவிட்டுப் பிரிந்து சென்றது. உதயணன் கோடபதியை வாசிக்கும்போது வழக்கம்போல் யானை வாராதது கண்டு தன் குற்றத்தை உணர்ந்து மிக வருந்தினன். அமைச்சர்கள் 'அந்த யானையைத் தேடித் தருவோம்' என்று உறுதி கூறினர். வருத்தம் தணியாமல் கவலைக்கடலில் அழுந்திய உதயணன் பல பணியாளர்களைப் பல்வேறிடங்கட்கு அனுப்பி அதனைத் தேடச் செய்தான். அஃது அகப்படாமையால், தானே யாழு-

டன் காடுகளிற் சென்று அதனைத் தேடித் திரியலானன்.

வாசவதத்தை

அவந்திநாட்டில் உச்சியினி நகரத்தில் பிரச்சோதனன் என்னும் அரசன் செங்கோல் செலுத்திவந்தான். அவனுடைய தேவியரில் சிறந்த பதுமகாரிகை என்பவளுக்கு இந்திரன் அருளால் ஒரு மகள் தோன்றினள். அதனல் அவளுக்கு வாசவதத்தை என்று பெய ரிடப்பட்டது. அவள் மிக்க அழகுடையவள். அவளுடைய கூந்தல் கருமணல் போன்றது. புருவம் வில்லை நிகர்த்தது. கண் அம்பை ஒத்தது. நெற்றி பிறை யன்னது. முகம் நிறைமதி யனையது. சொல் கிளி புரைவது. நகம் கிளியின் வாய்போல்வது. தோள் மூங்கில் மானுவது. பல் முகத்தைக் கடுப்பது. விரல் காந்தள் அரும்பை யியைவது. அவள் எல்லா வகையிலும் சிறந்தவள். பிரச்சோதனனுக்கு வேறு பல மக்களும் இருந்தனர். புதல்வர்களிற் சிறந்தவர் பாலகன், பாலகுமரன், கோபாலகன் என்பவர். மிக்க ஆற்றலுடையதும், பெரியதுமான நளகிரியென்னும் பட்டத்துயானையும் அவனுக்கு உண்டு. அவனுடைய அமைச்சர் பதினுயிரவர்.

எந்திரயானை

வத்தவநாட்டரசனும், வைசாலியரசனும் கப்பம் கட்டவில்லை என்பதை யறிந்த பிரச்சோதனன் அவ்விருவரையும் பிடித்து வரச் செய்ய வேண்டுமென்று மந்திரிகளிடம் கூறினன். சாலங்-

காயன் என்னும் அமைச்சன் அரசனை நோக்கி, "உதயணன் தெய்வயானையைப் பிரிந்து காடுகளில் அதைத் தேடி அலைகின்றான். நாம் மாய யானை யொன்றால் உதயணனை மயக்கிப் பிடித்து வர-வேண்டும். யூகி உதயணனுக்கு உதவிசெய்யாத-படி, அவனுடன் போர்செய்யப் படைகளை வைசா-லிக் கனுப்பவேண்டும்" என்று கூறினான். அரசன் அவ்வாறே படைகளை வைசாலிக் கனுப்பிவிட்டுச் சிறந்த சிற்பிகளைக்கொண்டு அரக்கு, மரம் முதலிய-வற்றால் மிகப்பெரிய எந்திரயானை ஒன்றைச் செய்-வித்து, படைகள் ஏந்திய போர்வீரர் தொண்ணூற்-றறுவரை அவ்யானையின் வயிற்றிலிருக்கும்படி செய்து, அதன் துதிக்கையிலும் நான்குகால்களிலும் பலவகைப் படைகளை வைத்துக் கௌசாம்பிக் கனுப்பினான்; அதன்பின் பதினாயிரம் எண்ணுள்ள நால்வகைப் படைகளையும் சாலங்காயனையும் ஒரு படைத்தலைவனையும் அனுப்பினான்.

உதயணன் சிறைப்படல்

நீலமலைபோன்ற அந்த எந்திரயானை உத-யணன் தேடிக்கொண்டிருந்த காட்டின் நடுவில் சென்று மேகம்போல் பிளிறிக்கொண்டு உலாவி-யது. படையோடு சென்ற சாலங்காயன் அதன் பின்னே சென்று எவரும் அறியாதபடி மறைந்-திருந்தான். மாயயானையைக் கண்ட வேட்டுவர்கள் உதயணனிடம் சென்று கூறினர். அவன் யாழு-டன் புறப்பட்டான். பல தீநிமித்தங்கள் தோன்-றின. வயந்தகன் தடுத்தான். உதயணன் விரைந்து காடு சென்று எந்திரயானையைக் கண்டு

அது தன் தெய்வயானையே எனக்கொண்டு மகிழ்ந்து, தன் படைகளைத் தொலைவில் நிறுத்தித் தான் மட்டும் அதன் அருகே சென்று இனிய பண் ஒன்றை யாழில் வாசித்தான். இசையில் விருப்ப முடையதுபோல் அந்தயானை எதிரேவந்து நின்றது. உதயணன் மகிழ்ந்து மெய்ம்மறந்து நின்றான்.

உடனே உள்ளிருந்த வீரர்கள் மாயயானையின் பொறிகளைக் கழற்றிக்கொண்டு திடீரென வெளிவந்து போர் செய்யத் தொடங்கினர். உதயணன் இது கயவர்கள்செய லென்றெண்ணிப் புன் முறுவலுடன் பெருமிதத்தோடு நின்றான். ஐந்நூறு படைஞரோடு உடன்வந்த வயந்தகனல் அவ்வீரர் தொண்ணூற்றறுவரும் கொல்லப்பட்டனர். சாலங்காயன் உதயணனுடன் பொருது தோற்றான். படைத்தலைவனும் பட்டான். சாலங்காயனை வெட்டுதற்கு வாளைத் தூக்கிய உதயணன் மந்திரியைக் கொல்லல் அறமன்றெனக் கொல்லாதுவிட்டான். தன் வாளால் பல யானைகளை வெட்டி வீழ்த்தியபோது ஒருயானையின் கோடுபட்டு வாள் ஒடிந்து போயிற்று. படையின்றி வெறுங்கையுடனிருந்த உதயணனைச் சாலங்காயன் முதலியோர் சூழ்ந்து பிடித்துக்கொண்டனர். சாலங்காயன் உதயணனைக் கட்டித் தேரிலேற்றிச் சென்று உச்சயினி அடைந்து பிரச்சோதனனிடம் தெரிவித்து, அவன்கட்டளைப்படி உதயணனுக்கு விலங்கிட்டு இருள் மிக்க சிறையில் வைத்தான்.

யூகி சூளுரை

வயந்தகன் விரைவில் வைசாலிநகரை யடைந்து, அங்குப் பிரச்சோதனன்படைகளுடன் போர்புரிந்துகொண்டிருந்த யூகியிடம் நிகழ்ந்த செய்திகளைக் கூறி, உதயணன் தந்த திருமுகத்தைக் கொடுத்தான். யூகி வருந்தி வெகுண்டு, 'இரும்பை எலி விழுங்கியது' என்பதுபோல வஞ்சகத்தால் வென்றவனை வஞ்சகத்தால் வெல்லவேண்டுமென்று கருத்துட்கொண்டான். அங்கிருந்த நண்பர்களை நோக்கி, "கள்ளயானையால் நம் அரசனைவஞ்சித்துச் சிறைசெய்த பிரச்சோதனன்நகரத்தை ஒரு யானையாலேயே அழித்து உதயணனை மீட்பேன். உஞ்சையைத் தீக்கு இரையாக்குவேன். பிரச்சோதனன் அறியாமல் வாசவதத்தையை வலிந்து கொண்டுவரச்செய்து உதயணனுக்கு மணம் புரிவிப்பேன்" என்று சூளுரை கூறினன்.

பின்னர் யூகி தன் சபதத்தை முடிப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, 'உதயணன் பிரிவினல் யூகி இறந்து விட்டான்' என்ற பொய்ச் செய்தியை எங்கும் பரப்பி, ஒரு பிணத்திற்குத் தன் ஆடையணிகளை அணிவித்துத் தன் பிணமென்று பிறர் நினைக்கும்படி அதைச் சுடச்செய்துவிட்டு மாறுவேடம் பூண்டு வயந்தகன்முதலியோருடன் உஞ்சைநகரின் புறத்தே தங்கினன்; அங்குத் தனியிடத்திலிருந்து, தோழர்களைப் பிறர் அறியாதபடி ஒவ்வொரு வேலையி லிருக்கச்செய்து, அவர்கட்கு வேற்றுமொழிகளைக் கற்பித்து வணிகராயும் ஊமையர் செவிடர்போல் அரண்மனைக் குற்றேவல்

புரிபவராயும் இருந்துவருமாறு ஏவினான். வயந்தகன் அரசகுமாரர்களோடு கல்விகற்றும், அவர்கட்கு ஏவல்செய்தும் வந்தான். இவர்கள், ஊரில் நடக்குஞ் செய்திகளை அவ்வப்போது யூகிக்கு அறிவித்தனர்.

யூகியின் பித்தக் கோலம்

ஒருநாள் யூகி சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, மிகுந்த நோயாளன்போலவும், தெய்வ ஆவேசம் கொண்டவன்போலவும், தலையில் நீர்க் கரகம் தாங்கிக் கையைத்தட்டிப் பாடிக்கொண்டு உச்சயினிநகர வீதியில் சென்று, "வானுலகிலிருந்து ஒரு தேவன் இந்நகரில் வந்திருக்கின்றான். அத் தேவனைப் பின்பற்றியே நானும் வந்துளேன். இவ் வரசன் ஐந்தலை அரவம் ஒன்றைச் சிறையில் வைத்திருக்கின்றான். அஃது எங்கே இருக்கின்றது?" என்று கூறி ஆரவாரஞ் செய்துகொண்டு வந்தான். அவனை மக்கள் பலர் சூழ்ந்து வேடிக்கை பார்த்துப் பின்தொடர்ந்தனர். உதயணன் இருக்குஞ் சிறைப் பக்கமாக வந்த யூகி அவனும் தானுமே யறிந்ததும் பிறர் அறியாததுமான ஒரு பாட்டைப் பாடினான். அதுகேட்ட உதயணன் யூகி வந்துளான் என்பதை அறிந்து மகிழ்ந்து குழலை யூதினான். வேடிக்கை பார்ப்பவன்போல் வெளியே வந்த உதயணனைக் கண்ட யூகியும் அவனுடன் வந்த வீரரும் உவகை யுற்றனர். பின்னர் யூகி பேயாட்டமாடிக்கொண்டு தன்னிருப்பிடம் அடைந்தான்; அதன்பின்னும் சில நாட்கள் இவ்வாறே உலாவிவந்தான்.

இதை அறிந்த சிறைச்சாலைக் காவலன் ஒருவன் பிரச்சோதனனிடம் சென்று கூறினன். அப்போது சாலங்காயன், "யூகி இறந்திருக்க மாட்டான். பித்தனைப்போல் நடிப்பவன் யூகியே என்று நான் ஐயுறுகின்றேன். அவன் மார்பில் யானை குத்திய தழும்பு உண்டு. அதனை யறிய வேண்டும்" என்றான். இதை உற்றுக் கேட்டிருந்த யூகியின் ஒற்றன் ஒருவன் உடனே சென்று நிகழ்ந்தவற்றை யூகிக்குச் சொன்னன். தன் மார்பிலுள்ள தழும்பை யாரும் அறியாதபடி கந்தைகளால் மறைந்துக்கொண்டு யூகி வழக்கம்போல் வீதியில் சென்று வருவானாயினன். இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

நளகிரி மதம்பட்டது

ஒருநாள் யூகி 'உதயணனைச் சிறை மீட்டற்குரிய வழி யாது?' என்று தன்னுள் ஆராய்ந்து, பேய்வடிவத்தோடு நள்ளிரவில் பிறர் அறியாவண்ணம் நகருள் சென்று, நளகிரி என்னும் யானையை அடைந்து, அது குணம் சிதைந்து கெட்டு மயங்கித் திரிந்து பிறரை வருத்தும்படி அகிற்புகை யூட்டியும், ஒருவகை மருந்தைக் கொடுத்தும், மதவெறி, கோபம், வலிமை இவற்றை உண்டாக்கினன். பின்பு அதனருகே சென்று, "இந்நகரத்தை அழித்து யாவர்க்கும் கவலையூட்டி உதயணனைச் சிறை மீட்பது உன் கடமை" என்று கூறி, உச்சாடன மந்திரம் ஒன்றை அதன் காதில் ஓதிவிட்டு, தன் இருப்பிடம் அடைந்தான். உடனே அது மிக்க சினங்கொண்டு மதவெறியால் கட்டுத்தறியை முறித்து, கட்டிய

சங்கிலியை அறுத்துவிட்டுப் பெருமுழக்கத்தோடு சுழன்று சுழன்று ஓடி ஊரை அழிக்கத் தொடங்கி, பழகிய பாகரையும் கொன்றது. அதை யறிந்து நகரத்தார் நடுக்க முற்றனர். அச் செய்தியைக் கேட்ட அரசன் கலக்கமுற்று அரண்மனையின் மேல்மாடத்தில் ஏறி நின்று பார்த்தான். யானை மாளிகைகளையும், கோபுரங்களையும் கொம்புகளால் குத்தி அழிப்பதையும், மக்களைக் கொல்வதையும் கண்டான்; அதை அடக்குவதற்குப் பல வீரர்களை அனுப்பினன். அது ஐந்நூறு வீரர்களைக் கொன்றுவிட்டு மதிலுக்கு வெளியே சென்று பல சேரிகளையும், பாடிகளையும், நந்தவனங்களையும் அழித்தது. நகரம் நிலை குலைந்தது. அதனல் கவலையிலாழ்ந்த அரசன் 'இத் துன்பம் போக்கும் வழியாது?' என்று அமைச்சரை உசாவினன்.

உதயணன் யானையை அடக்குதல்

'உதயணனை அனுப்பின் யாழிசையால் நளகிரியை அடக்கி விடுவான்' என்ற சாலங்காயன் கருத்தின்படி, சிவேதன் என்னும் அமைச்சனை உதயணனிடம் அனுப்பினன். சிவேதன் உதயணனிடம் சென்று அரசன்கருத்தை வணக்கத்துடன் அறிவித்து அவனை உடன்படச் செய்து, சிவிகையில் ஏற்றி அழைத்துச்சென்று நளகிரியின் முன்விடுத்தான். உதயணன் மந்திரத்தினல் நளகிரியை அசைவறச் செய்து, தன் யாழை வாசித்துப் பாடிக்கொண்டு அதன் அருகே சென்ருன்.

சென்றபோது நளகிரி மதம் அடங்கி நல்லா-

சிரியனுக்குக் குற்றேவல் செய்யும் மாணக்கன் போலவும், தந்தையின் அடிபணியும் மைந்தன் போலவும் உதயணனருகில் வந்து அன்புடன் அவனை வணங்கி ஏவல் கேட்டு நின்றது. உதயணன் அதன்மேல் ஏறி, கண்டோர் வியக்குமாறு அதனைச் செலுத்திக்கொண்டு யாதோர் இடையூறு மின்றி நகரத்து வீதிகளில் சென்றான். நகரமாந்தர் மிக-மகிழ்ந்து உதயணனை வாழ்த்தி மலர்தூவி வரவேற்-றனர்.

அதைக் கேட்ட பிரச்சோதனன் உவந்து புலிமுகமாடத்தில் தேவியரோடு வந்து தங்கி, உதய-ணனைக் காண விரும்பினான். உதயணன் யானையைப் பிரச்சோதனன்எதிரில் கொண்டுபோய் நிறுத்தி-னான். அதுகண்ட பிரச்சோதனன் உதயணனை நோக்கி, "நீ புண்ணியம் மிக்கவன்; மந்திரநூலில் வல்லவன்; நற்குடிப்பிறந்தவன்; நற்குணக்கடல். உன் நிலையை அறியாமல் உனக்கு மிக்க தவறு செய்துவிட்டேன். பொறுத்திடுக" என்று வேண்டி, விலை மதிப்பிட முடியாத ஒருமாலையை அவனுக்கு அனுப்பினான். உதயணன் அதனை ஏற்றுக்-கொண்டான்.

அப்போது பிரச்சோதனன் உதயணனை நோக்கி, "உன் அருஞ் செயல் கண்டு மகிழ்ந்தேன். நீ கற்ற கலைகள் யாவை? அவற்றை அறிய என் மனம் அவாவுகின்றது" என்று வினவ, உதயணன் தான் கற்ற கலைகளைக் கூறினான். கேட்ட அரசன், "இந்த இளமையில் இவ்வளவு கலைகள் இவன்

கற்றிருப்பதற்கு இவனது தவமே காரணம்" என்று வியந்து, "இங்கே எம்மால் இயன்ற அளவு உனக்கு வேண்டியவற்றைச் செய்வோம். நீ கௌசாம்பி-நகர்க்குச் செல்லும்போது உன் தம்பியர் வந்து உன்னை வழிபடுவார்கள்" என்று கூறி, அரசகுமாரர் சிலரை அவனுக்கு ஏவல் புரியுமாறு ஏவி, அவனுடன் அளவளாவிக்கொண்டிருந்தான்.

வாசவதத்தையைக் காணல்

'இந்த யானை மதம்பட்டதற்குக் காரணம் யாது?' என்று பிரச்சோதனன் கேட்டதற்கு விடைபகர்தற்-காக உதயணன் தலை நிமிர்ந்தபோது, அரசனுக்குப் பின்னே தாய்மார்களின் இடையே நின்ற வாசவ-தத்தையைக் கண்டான். அவளும் நோக்கினள். உதயணன் தன் மனத்தை ஒருவாறு தேற்றிக்-கொண்டு நளகிரி வெறி கொண்டதற்குரிய காரணங்-களை விளக்கமாகக் கூறினன். அதுகேட்ட அரசன் வியந்து யானைச்சேரியிலுள்ள அரண்மனையில் உதய-ணன் தங்கியிருத்தற் கேற்றவைகளைச் செய்து, உதயணனை நோக்கி, "இது உன்னுடைய நகர். யாங்கள் யாவரும் உனக்கு உரியவர்களே. எம்-முடைய பொருள்களும் உன்னுடையனவே. இனி உன் மாளிகையில் சென்று இளைப்பாறுக" என்று கூறி அனுப்பினன்.

உதயணன் அம் மாளிகையை யடைந்து துரி-யோதனன் அமைத்த அரக்குமாளிகைபோலிருக்-குமோவென்று ஐயுற்றுப் பல இடங்களையும் துருவி யறிந்து ஐயம் நீங்கினன். பின் வாசவதத்தையை

நினைத்து வருந்தி, அவளை மணக்கப் பெறுவேனே என்று கவன்றான்.

புலிமுக மாடத்திலிருந்து தாய்மாருடன் சென்ற வாசவதத்தை சேடியருடன் கன்னிமாடம் அடைந்து உதயணனையே நினைந்து வருந்தினாள்; "இந்த இளவரசனைச் சிறையிலிட்டதுமன்றி, வெறி-கொண்ட யானையின் முன்னும் அனுப்பத் துணிந்த அரசன் மனம் கல்லோ!" என்று தந்தையை வெறுத்தாள். "யானையைப் பிணித்ததன்றி என் உள்ளத்தையும் பிணித்த வீரனை இன்னமும் காணப் பெறுவேனே!" என்று புலம்பி, மலரணை-யிற் கண்ணுறங்காமல் கவன்றாள்.

யாழ்கற்பித்தல்

மறுநாள் பிரச்சோதனன் உதயணனைத் தன்னாட்டில் சிலநாள் தங்கச் செய்யும் எண்ணத்-துடன் சிவேதனை நோக்கி, "நீ உதயணனிடம் சென்று, 'அரசிளங்குமரர்க்குப் படைப்பயிற்சி முதலிய பலவகைக்கலைகளையும், வாசவதத்தைக்கு வீணையையும் பயில்விக்க வேண்டும். இஃது எம்-முடைய குறை' என்று யாம் விரும்புவதாகச் சொல்லி, எப்படியேனும் அவனை உடன்படுவித்து வருக" என்று சொன்னான். அவனும் அவ்வாறே சென்று உதயணனிடம் அரசன்வேண்டுகோளைத் தெரிவித்தான்.

உதயணன் நெடுநேரம் சிந்தித்து, "இத்-தொழில் சிறுமை என்று நாணினால், விரும்பிய

கன்னியைப் பெறுவதற்கு வேறு வழியில்லை. குமாரர்க்குக் கற்பிக்கும்போது, அன்று கண்ட நங்கையை நாம் காணவும் கூடும். காணின் 'உயிர் தாங்க வழி உண்டாகும்.' 'அறிவுடையோர் உயிர் நீங்க நேருங் காலத்தில் தம் உயர்விற்குச் சிறிது தாழ்வு நேரினும் கவனியார்.' ஆதலின் நமக்குச் சிறுமை நேரினும் அரசன் கூறியதைச் செய்தலே நன்று" என்று துணிந்து, "அரசன்கட்டளைப்படி நடப்பேன்" என்று கூறினன். சிவேதன் அரசனிடம் சென்று உதயணன் உடன்பட்டதைத் தெரிவித்தான்.

அரசன் தன் தேவியர் பலர் பெற்ற மகளிருள் பெதும்பைப்பருவத்தினர் அனைவரும் வருக என்று கட்டளையிட்டான். செவிலித்தாயர் முதலியோர் பளிங்கறை, பந்தாடுமிடம், ஊசலாடுமிடம், மலர்பறிக்குஞ் சோலை, தடாகங்களின் கரைகள், கிணற்றின் கரைகள் முதலிய இடங்களில் சென்று கூவிப் பெண்களை அழைத்து வந்தனர். அவர் அனைவரும் வந்து அரசன் அடிவணங்கி நின்றனர். நின்றவர்களை நோக்கிய அரசன் அவர்கட்கு வேண்டிய பந்து, கிளி, செப்பு, மயில், பூவை, கண்ணி, கழங்கு, பவளப்பாவை, கிளிக்கூடு முதலியவற்றை யளித்து, 'நீங்கள் இதுவரை கற்ற சமையல்தொழில், யாழ்வாசித்தல், மலர்தொடுத்தல், ஓவியம், பேச்சின்திறம் முதலியவற்றைக் காட்டுக' என்று கூறி மகிழ்வித்து அவர்களை யனுப்பிவிட்டு, "இனி வாசவதத்தை உதயணனிடம் யாழ்கற்பதற்கு உரியவற்றை அமையுங்கள்" என்றான்.

அதைக்கேட்ட கோப்பெருந்தேவி இசைப் பயிற்சி தன் மகளுக்குப் பெருமை தரும் என்று எண்ணித் தன்னுள் மகிழ்ந்தாள். மற்றைத் தேவியரும் புகழ்ந்தனர். 'அரசன்மகட்கு யாழ் கற்பிக்கும் ஆசிரியனாக வருபவன் பெரும் புண்ணிய முடையோன்' என்று அனைவரும் பாராட்டினர். 'வத்தவர்பெருமான் வீணைவித்தை தத்தைக்கே உரியது' என்று பலர் தம்முள் மெல்லப் பேசிக்கொண்டனர்.

அப்போது செவிலியர் பூக்கள் முதலியவை வைக்கப்பட்டுள்ள பொன் அகல்களை அங்கே வைத்து, இசைக்கு உரிய தெய்வங்களைத் துதித்து வாசவதத்தையைச் சந்தனநீரால் முழுகுவித்து, யானைத்தந்தத்தால் செய்த மங்கலச்சீப்பால் கூந்தலை வாரிப் பொன்கயிற்றால் கட்டி முடித்து, பொற்சின்னங்களை அதன்மேல் சிதறி, நெற்றியில் சுட்டியையும் முத்தணிகளையும் சேர்த்தி, காதுகளில் முன்னிருந்த ஓலையையும் குழையையும் நீக்கிப் புதிய அணிகளைப் பூட்டி, சந்தனக்குழம்பால் தோள்களில் பூங்கொடி எழுதி, கழுத்தில் முத்துமாலை முதலியவற்றை அணிவித்து, இடையில் பட்டுடைமீது மேகலை புனைந்து நடைப்பெருந் தவிசின்மீது அவளை மெல்ல நடத்தி வருவாராயினர். தத்தை தாய்மாரோடு மெல்ல வந்து இசையரங்கில் ஒரு திரைமறைவில் நின்றாள்.

அப்போது தாய்மார் "யாழைப் பூசிப்பதற்கும், அதனைக் கற்பித்தற்கும் உரிய நல்ல வேளை வந்துவிட்டது என்று உதயணனுக்குக் கூறுங்கள்"

என்றனர். உடனே சிலமகளிர் ஒடிச்சென்று உதயணனுக்குத் தெரிவித்தனர். அவன் வந்து அங்கே அமைக்கப்பட்டிருந்த மெல்லிய தவிசின்மேல் வீற்றிருந்தான். வாசவதத்தையைத் திரைமறைவில் மற்றோர் இருக்கையில் அமர்வித்தனர்.

அப்போது உதயணன் "யாழ் பயில இங்கே வந்துள்ளவள் முன் என்னுள்ளங் கவர்ந்த நங்கையோ? வேறு யாரோ?" என்று எண்ணிக்கொண்டிருந்தான். எனக்கு யாழ் கற்பிக்க ஈண்டு வந்திருப்பவன் அன்று மதயானையையடக்கி ஊர்ந்து வந்து புலிமுகமாடத்தின் எதிரே நின்று என் மனத்தைக் கவர்ந்து சென்ற இளஞ்சிங்கமோ? வேறு யாவனோ?" என்று வாசவதத்தையும் நினைத்துக் கொண்டிருந்தாள். அந்தவேளையில் தோழியர் 'ஆசிரியனுக்குச் செய்யும் வழிபாடு இதுவாகும்' என்று கூறித் தத்தையின் கையைக் குவிக்கச் செய்து திரையைத் திறந்தனர். இருவரும் கண்டு களித்தனர். அன்புடை நெஞ்சம் கலந்தன. உதயணன் யாழைக் கொடுத்துக் கற்பிக்க, தத்தை அதனை ஏந்திக் கற்பாள் ஆயினள்.

உதயணன் நாடோறும் வாசவதத்தைக்கு யாழ்கற்பித்து வருகையில், அந்நகரத்துள்ள வம்பமாக்களுட் சிலர், "பகைவரும் அணுகமுடியாத அந்தப்புரத்தில் இருப்பதற்கு உரிய தன் மகள் ஒருத்திக்கு யாழ் கற்பிக்கும்படி அயலானாகிய அரசிளங்குமரன் ஒருவனை ஆராயாமல் ஆசிரியனாக ஏற்படுத்திய நம் பேதையரசன், அதனால் விளையுந் தீமையைச்

சிலநாள் சென்றபின்னராவது நன்கு தெரிந்து-கொள்வான்" என்றனர். இவ்வாறே மற்றவர்-களும் தத்தமக்குத் தோன்றியவைகளை விரைந்து சொல்லிவிட்டு, பின் அச்சமுற்று, முன் பின் பார்த்து, 'நாம் எதையும் சொல்லக் கூடாது' என்று வாயடங்கினர்.

அரசன்கட்டளைப்படி அரசிளங்குமாரர்கள் உதயணனிடம் விற்பயிற்சி, மற்போர்ப்பயிற்சி, யானையேற்றம் முதலியவற்றையும் பிறவற்றையும் நாள்தோறும் கற்றுவந்தனர். இப்படிச் சில-நாட்கள் சென்றன.

அரங்கேற்றல்

அரசகுமாரர் கற்ற ஆயுதப்பயிற்சி முதலியவை ஒரு நன்னாளில் தனித்தனியே அறிஞர்முன்னிலையில் அரங்கேற்றப்பட்டன. புதல்வரின் திறமையை அறிந்த அரசன் "நம்மிடம் சிறிதும் பகை பாராட்-டாமல் நம் மக்களுக்குக் கலைகளைக் கற்பித்த உத-யணனுக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு யாது? அவன் பொருளை விரும்பான். சொந்த நாட்டிற்கு அவனை அனுப்பி மணம்புரிந்துகொண்டு இனிதே வாழும்படி செய்வதுதான் நமது கடமை" என்று நினைத்தான்.

தத்தையின் கல்வியையும் நன்னாள் ஒன்றில் அரங்கேற்றத் தேவியர் விரும்பினர். இசைப்-புலவர் பலர் கூடிய பேரவையில் தத்தை யாழ் வாசித்தும், பாடியும் அனைவரையும் மகிழ்வித்தாள்.

யாவரும் உதயணனையும் அரசனையும் பாராட்டினர். பிரச்சோதனன் உதயணனை அழைத்து முகமன் கூறி, "உன் நகரமாகிய கௌசாம்பியை வலிந்து கைப்பற்றி ஆண்டுவரும் ஆருணி என்னும் அரசனை வெல்வதற்கு உனக்குத் துணையாக என்மகன் பாலகனை அனுப்புகின்றேன்" என்று உரைத்து, இச்செய்தியை ஆருணிக்குத் தூதுவன்ஒருவன் வாயிலாகச் சொல்லியனுப்பினன்; பின், "சேனைகளும் சேனைத்தலைவர்களும் பாலகனும் உதயணனுடன் நாளை கௌசாம்பிக்குப் புறப்படுக" என்று கட்டளையிட்டான்.

யூகியின் சூழ்ச்சி

இதைக் கேள்வியுற்ற யூகி, "இப்போது உதயணன், பாலகன் முதலியவர்களோடு கௌசாம்பிக்குச் செல்லின், நான் முன்செய்த சூளுரை நிறைவேறாது. இம்முயற்சியைத் தடுத்து என் வஞ்சினத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று கருதி, குறிசொல்பவளாகிய பாகீரதி என்பவளை வருவித்து, "நீ ஆவேசம் வந்தவள்போல் நகரத்துள் சென்று அரண்மனையில் உள்ளவரும் பிறரும் அறியும்படி குறி சொல்லி யாவர்க்கும் அச்சத்தை உண்டாக்கி நீர்விழா நடத்துமாறு செய்க" என்று கூறி, சொல்ல வேண்டிய முறைகளையும் அறிவுறுத்தி அனுப்பினன். அவள் ஆவேசம் உற்றவள்போல் ஆடிக்கொண்டு நகரத்தினுள் சென்று எல்லாரும் கேட்கும்படி, "சென்ற ஆண்டில் இவ்வூரார் நீர்விழா வைச் செய்யாமல் நிறுத்திவிட்டதனல் சினந்து நளகிரியைக் கோபமூட்டி ஊரை அழிப்பித்த

தெய்வம் யான். இப்போதும் நீங்கள் நீர்விழாவைச் செய்யாவிடின், இன்றும் அந்த யானையுட் புகுந்து ஊரை அழிப்பேன்" என்று கூறினள்.

'பன்றியால் துன்புறுத்தப்பட்ட நாய் சோற்றுப்பானையைக் கண்டபோதும் அதைப் பன்றியென்றே நினைந்து மிக அஞ்சுவதுபோல' ஊரார் இப் பொய்ஆவேசக் கூற்றிற்கும் மிக அஞ்சி அரசனுக்கு அதைச் சொல்லி விடுத்தனர். அவன் நீர்விழா நடத்தும்படி கட்டளையிட்டான்; "நாளை நீர்விழா" என்று முரசறைவித்து ஊரார் எல்லார்க்கும் அறிவித்தான். இதை உதயணனுக்குத் தெரிவிக்குமாறு நால்வரை விடுத்தான்.

நீர்விழா

நீர்விழாவில் விருப்பமுள்ள நகரமாந்தர் தோணி, கட்டுமரம், நாவாய், மிதவைமாளிகை, நீந்தும் புணை முதலியவற்றைச் செய்துகொண்டும், சிவிகை, தேர், ஊர்தி முதலியவை சமைத்துக்கொண்டும் புறப்படலாயினர். எல்லாச் சேரிகளிலும் யாழும், குழலும் இயம்பின; சங்கும், கொம்பும் முழங்கின. பல்வகைக் கொடிகளும் அசைந்தன.

மகளிரும் மைந்தரும் வீரரும் விரும்பி ஏறிய யானையும் தேரும் தெருவில் செல்வதனல் எழுந்த துகள் சூரியனை மறைத்தது. யானைகளிலும் தேரிலும் வரும் அரசகுமாரரும் நகரநம்பியர்களும் செல்வதற்கு வழியில்லை. "யானை வருகிறது, வழி வில-

குங்கள். இது அரசன் கட்டளை" என்று கூறவும், அதுகேட்ட இளைஞர்கள் "இப் புதுநீராட்டு எங்கட்கே யுரியது. அரசன் ஆணைக்கும் அஞ்சோம்" என்று கூறி நெருங்கினர். மக்கள் கடல்மடை திறந்ததுபோல் பல திசைகளிலிருந்து பலவகை ஊர்திகளிலும் வந்து ஆற்றின் இருகரைகளிலும் தடாகத்தின் நான்கு பக்கங்களிலும் அடைந்து ஆங்காங்குள்ள பொழில் முதலிய இடங்களில் மரங்களின் அடியில் கூடாரமடித்துத் தங்கினர். பல பண்டங்கள் விற்குங் கடைகளும் அமைக்கப் பட்டன.

அரசன் "இவ்விழா நடைபெறும் இருபத்தொரு நாட்களிலும் மெய்காப்பாளர் தவிர யாரும் படைக்கலத்தைக் கையில் எடாதொழிக. பகைவர், திருடர், குற்றம்புரிந்தோர் முதலியவரும் விழாவிற் கலந்துகொள்க" என்று ஆணையிட்டு, தேவியருடன் புறப்பட்டு நளகிரியின்மேல் ஏறி வந்தான். அணிகலப்பெட்டி, கவரி, ஆடைகள், தேன்குடம், பூ, சிப்பு, கட்டில், கண்ணாடி, பந்து, பாவை, வாசச்சுண்ணம், கழங்கு, யாழ், குழல், முழவம் முதலியவை யாவும் ஊர்திகளில் உடன் வந்தன. வாசவதத்தையும் நீர்விழாவிற்குச் சிவிகையில் வந்தாள்.

அரசன் சிவேதன்மூலம் அனுப்பிய பத்திராபதி என்னும் பெண்யானையின் மீது உதயணன் வந்து சேர்ந்தான். நீராடுதற் குரிய நல்லோரையில் அரசன் அனைவரையும் நீராடுமாறு கட்டளையிட்டுத் தானும் நீராடினன். உடன்வந்தோர் நீர்த்துறை-

களில் இடம்பெறுது நெருக்கத்திற் சென்று நீராடினர். பொய்கையும் பொய்கைக்கரைகளும் பல் வகைச் சிறப்புக்களாலும் ஓசைகளாலும் திகழ்ந்தன. அரசகுமாரரும் மகளிரும் நீராடி மகிழ்ந்தனர். காஞ்சனமாலையும் பிறதோழியரும் வாசவதத்தையை மிக்க உபசாரத்துடன் நீராட்டி அலங்கரித்தனர்.

அந்தணமகளிர், அரசமகளிர், பெருந்திணைமகளிர், காவிதிமகளிர், வாணிகமகளிர், பெருங்குடிமகளிர் ஆகியோர் நீர்த்துறையில் ஒருவர்மேலொருவர் பூமாலைகளை எறிந்தும், சந்தனத்தை இறைத்தும் சிவிறிகளால் நீரைச் சொரிந்தும், முகத்தில் நீரை அள்ளி எறிந்தும், கண் சிவப்ப, கூந்தல் நெகிழ, வியர்வை துளிக்க நீரில் விளையாடிச் சோர்ந்தனர். பின்னர் வெளிவந்து பட்டாடை யுடுத்தி, பொன்னுபரணங்கள் அணிந்து, கூந்தலை உலர்த்தினர்.

அச்சமயத்தில் உதயணன் தன்னைச் சிறைப்படுத்திய பிரச்சோதனனுடைய செல்வமிகுதியும், அங்கே நீராடுவோருடைய இன்பக் களியாட்டமும் தன் மனத்தை வருத்த, "பத்திராவதியின்மேல் ஏறிவந்த இந்த நாளிலாவது நம் கருத்தை முடிக்க வேண்டும்" என்று எண்ணமிட்டுக்கொண்டு அந்தப் பிடியின்மேலே இருந்தான்.

யூகியின் தந்திரம்

அப்போது வயந்தகன் உதயணனை அடைந்து யூகி சொன்ன சில செய்திகளைக் கூறுவானுயினன்: "நீ பத்திராபதியின்மேல் ஏறியிருத்தலாலும்

வாசவதத்தை தனியே நீராடுவதனாலும், அவளைக் கைப்பற்றி இந்த யானையின்மேல் ஏற்றிச் செல்லு-தற்குரிய சமயம் இதுவேயாகும். முன்னமே யூகி-யால் நியமிக்கப்பட்ட கள்ளமகளிர் சிலர் விரைவில் அந்நகரத்தைத் தீக் கிரையாக்குவர். அங்கே புகை தோன்றியவுடன் சிறிதும் தாழ்க்காமல் தத்தையைப் பிடியின்மேல் ஏற்றிச்செல்க. ஏற்றியவுடன் பிரச்-சோதனனுடைய வீரர்கள் தடுக்க வரின், நான்கு திசைகளிலும் மறைந்து திரியும் நம் வீரர் 'வாழ்க உதயணன்' என்று கூறிக்கொண்டும், மரப்பொந்து முதலிய இடங்களில் மறைத்துவைத்திருக்கும் படைக்கலங்களை வெளிப்படையாகக் கைக்கொண்-டும் போர்செய்து அவ் வீரர்களைத் தொலைத்துவிடு-வார்கள். இதுபற்றி உனக்குக் கவலை சிறிதும் வேண்டா. பகைவன்எல்லை கடப்பதற்குமுன் பத்-திராபதி வீழ்ந்து விடினும் கவலையில்லை. நம் நண்-பர்கள் ஆங்காங்கிருந்து நமக்கு உதவிசெய்வர். யூகி எண்ணித் துணிந்த செயல் எதுவும் நிறைவேறும். அவனும் விரைந்து பகைவென்று நம்மை வந்தடை-வான்" என்று கூறினன்.

அதுகேட்ட உதயணன் "யூகியும் யானும் உயிரோடிருப்பின் வானுலகத்தையும் வணங்கச் செய்வோம்" என்று கூறிப் புன்முறுவல் பூத்து, ஆங்காங்கு நிகழுங் காட்சிகளைக் காண்பவன்-போலப் பத்திராபதியை நடத்திக்கொண்டு சென்று வாசவதத்தை நீராடுந் துறையை அடைந்தான்.

அந்த நேரத்தில் நீர் கொண்ட மேகமும்

காற்றும் மிகக் கடுமையாகத் தோன்றின. அவற்றைக் கண்ட யூகி 'கனவில் கண்ட பொருளைக் கையில் பெற்ற வறியவன் போல்' மிக மகிழ்ந்து, ஆங்கு மறைந்துதிரியும் வீரர்கள் அறிந்துகொள்ளுமாறு ஒரு முரசைக் கொட்டினான். இடியோசை போன்ற முரசொலி கேட்ட அவன்வீரர்கள் ஊக்கமுடையவர்களாய், "வாழ்க உதயணன்! வாழ்க யூகி!" என்று முழக்கிக்கொண்டு வாட்படைகளை உருவி அங்கு இருந்தவரோடு போர்புரியத் தொடங்கினர்.

ஊர் தீயிட்டது

உள்நகரத்தில் யூகியால் வைக்கப்பட்டிருந்த கள்ளமகளிர் வீடுகள்தோறும் தீக்கொளுவினர். அத் தீ திரிபுர மெரித்த தீயைப்போல் கொழுந்து விட்டெரிந்து மிக ஓங்கி நெடுந்தூரத்தில் உள்ளவர்க்கும் தெரிந்தது. நீர்விழாவில் இருந்த மகளிர் "அரசனில்லாத சமயத்தில் பகைவர் அகநகரில் புகுந்தனரோ! நளகிரி மறுபடி வெறி கொண்டதோ!" என்று கூறி, பதறித் தம் மக்களையும் தம்மையும் காத்துக்கொள்ள அறியாமல் நிலைகுலைந்து சிதறி ஓடுவாராயினர். அந்தணர் சேரி, அருந்தவர்பள்ளி, அரண்மனை, தேவர்கோயில் இவைதவிர மற்ற இடங்கள் யாவும் தீக்கு இரையாயின. பல கட்டடங்களும் சேரிகளும் பாழ்பட்டன.

அதுகண்ட பிரச்சோதனன் செய்வது இன்னதென்று தெரியாமல் திகைத்து, "யானைகளை நாற்புறத்தும் அரணாக நிறுத்தி அதன் நடுவே நம்

உரிமைமகளிரை இருக்கச் செய்க" என்று கட்டளையிட்டான். சில யானைகள் இடிமுழக்கத்தைப் பகையானைமுழக்கமென்று கருதி வெகுண்டு ஓடிச் சென்று கூட்டங்களை மிதிக்கத் தொடங்கின.

இந்த ஓசைகளைக் கேட்ட நளகிரி கட்டை அறுத்துக்கொண்டு சீறிப் போர்க்களமெனக் கனன்று ஆரவாரம் செய்தது. அதுகண்டு அஞ்சி ஓடுபவர்களை உதயணன்வீரர்கள் கொன்று குவிக்கலாயினர். பிரச்சோதனன் ஏவலரை நோக்கி, "தன் மாணுக்கியாகிய வாசவதத்தையைக் காப்பாற்றுதல் தன்னுடைய கடமை என்று யான் கூறியதாக விரைந்து சென்று உதயணனிடம் கூறுங்கள்" என்று பணித்தான். அவர்கள் சென்று அதைக் கூற, கேட்ட உதயணன் 'நன்று' என மனத்துட் கொண்டு, 'தத்தையைக் காப்பது என்கடன். இதுபற்றிச் சிறிதும் கவலைவேண்டா' என்று அரசனுக்குச் சொல்லிஅனுப்பிவிட்டு, பத்திராபதியைச் செலுத்திக்கொண்டு வாசவதத்தை இருக்கும் இடத்தை அடைந்தான்.

தத்தையைப் பிடிமேல் ஏற்றியது

அவனைக் கண்ட காவலர்முதலியவர்கள் அவனிடம் விரைந்து வந்து, "தீப்பற்றி எரிவதனுல் நகரத்துள் இப்போது செல்வது இயலாது. பெருங்காற்றல் பொறிசிதைந்தமையால் ஊர்திகளும் இப்போது உதவா. உம் மாணுக்கியாகிய தத்தையை இப் பிடிமீது ஏற்றிக் கொண்டு காத்தருள்க" என்று வேண்டினர். அதுகேட்ட உதயணன் தன்

மகிழ்ச்சியை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு, தன்னை அடையும் ஆர்வத்தோடு நிற்குந் தத்தை-யைக் காஞ்சனமாலை ஏற்ற, தன் கையால் அவளைப்-பற்றிப் பிடிமீது ஏற்றிக்கொண்டு 'முடியாப் பெருஞ் செயல் முடித்தனம் இன்றே' என்று பேருவகை எய்தினன்.

காஞ்சனமாலையும் பிடியின்மேல் உடன் ஏறித் தன் கையிலிருந்த கோடபதியை வயந்தகனிடம் கொடுத்துவிட்டுப் பிடியின் நடைவேகத்தால் நடுங்குந் தத்தையைப் பிடித்துக்கொண்டாள். அங்கே வந்த சாங்கியத்தாயினிடம் யூகிக்குத் தான் எழுதிவைத்திருந்த ஓலையை உதயணன் கொடுத்து, யூகியிடம் அதைச் சேர்ப்பிக்குமாறு குறிப்பித்தான்; பத்திராபதியின் செவியில், "இந்த இருளில் எம்மை ஏற்றிக்கொண்டு விரைந்து சென்று காப்பது உன் கடன்" என்று கூறினன்; வராகன் என்னும் வீர-னிடமிருந்த அம்பையும் வில்லையும் வாங்கிக்கொண்டு பிடியை விரைவாகச் செலுத்தினன்.

அங்கே நின்ற காவலர் உதயணன் தன் நாடு நோக்கிச் செல்வது கண்டு அஞ்சினர். உதயணன்-வீரர்கள் கையில் படைகள் பிடித்துப் பிடியின் பின் காத்துச் சென்றனர்; தம்மைத் தடுத்து நிறுத்த வருபவர்களை வெட்டி வீழ்த்தினர். யூகி தன் உரு-வத்தோடு வெளிவந்து உதயணனை அடைந்து பத்-திராபதியின் காதில் மந்திரம் ஒன்றை ஓதி, அவ-ளைப் பார்த்து, 'விரைவில் செல்க. வெற்றி பெறுக' என்று கூறினன்.

அரசன்சினம்

உதயணன் வடகீழ்த்திசை நோக்கிப் பிடி-யைச் செலுத்தினுன். வாசவதத்தை நடுக்க-முற்ருள். உதயணன் அவளைத் தேற்றிக்கொண்டு-சென்ருன். இச் செய்தியை அரசனிடம் சொல்ல யாவரும் அஞ்சினர். வராகன் அஞ்சி அஞ்சிச் சென்று அரசனிடம் நிகழ்ந்தவற்றைத் தடுமாற்றத்-தோடு கூறினுன். அது கேட்ட அரசன் வெகுண்டு, பகைவர்களைப் பிடித்துவருமாறு வீரர்களை ஏவி-னுன். அப்போது சாலங்காயன், "குலத்தாலும், குணத்தாலும், நலத்தாலும், நண்பாலும், நிலத்தா-லும் நின்னேடு நிகர்ப்பவன் உதயணன் ஆதலின் அவன் வாசவதத்தையை அழைத்துச் சென்றது குற்றம் அன்று" என்று கூறி அரசனைத் தெருட்-டினுன்.

அரசன் சினந்தணிந்து, 'இச்செய்தியை நாமே பட்டத்தரசியிடம் தெரிவிக்க வேண்டும்' என்று நினைத்து முதற்பெருந்தேவியை அடைந்து, "வாசவதத்தையை உதயணனுக்கு மணம் செய்-வித்து அவனுடன் அனுப்ப என்மனம் விரும்பியது. உனக்கு இது உடன்பாடுதானே?" என்ருன். அவள் "நளகிரியை அடக்கி உமக்கு முன் கொணர்ந்து நிறுத்திய அன்றே அவனுடைய இள-மைக்கோலமும் பிறவும் அவன் வாசவதத்தைக்கு உரியவன் என்பதை நினைக்கச் செய்தன. எனக்-கும் விருப்பமே" என்ருள். அப்போது அரசன் 'காய்ச்சிய நாராசத்தைக் காதில் செருகியது' போல் தத்தையின் பிரிவுச்செய்தியைக் கூறினுன். அது-

கேட்ட அவள் ' இனிய இசையைக் கேட்டுக் கொண்டிருந்த அசுணம், பறையொலி கேட்டுப் படியில் விழுந்ததுபோல்' கீழேவிழுந்து புலம்புவாளாயினள். அந்தப்புரத்துமகளிர் பலரும் தத்தையின் பிரிவினல் வருந்தினர்.

முன்பு பிரச்சோதனனல் உதயணனைப் பிடித்து வருமாறு ஏவப்பட்ட போர்வீரர்கள் யூகியின் வீரர்களால் முறியடிக்கப்பட்டனர். பத்திராபதி இரண்டுகாததூரம் செல்லுமுன் கதிரவன் மேல்திசைக் கடலை அடைந்தான். மதி தோன்றியது. பிடி விரைந்து செல்லும்போது அதன் அடியோசைக்கும் வேகத்திற்கும் தத்தை மிக அஞ்சினள். காஞ்சனை அவள்காதில் பஞ்சை அடைத்து அவ்வோசை கேளாதிருக்குமாறு செய்தாள். பிடியானை மருதம், முல்லை, குறிஞ்சி நிலங்களையும் நருமதைஆற்றையும் கடந்து செல்லும்போது வயந்தகன் விண்மீன்களைப் பார்த்துக் காலஎல்லையைக் கூறினன்.

பிடிவிழ்ந்தது

பின்பு, கடப்பதற்கரிய பாலைவனம் காணப்பட்டது. ' இப்பாலையைப் பகலில் கடப்பது அரிது. இவ்விரவிலேயே கடத்தல் வேண்டும்' என்று வயந்தகன் கூறினன். உதயணன் பிடியை விரைவாக நடத்தும்போது மூங்கில்காட்டில் அவனுடைய யாழ் கீழே விழுந்து ஒரு மூங்கிலில் சிக்கிக்கொண்டது. வயந்தகன் யாழ் விழுந்ததைக் கூறியபோது பிடி எண்ணூறு விற்கிடைதூரம் சென்றுவிட்டது.

உதயணன் 'தந்த தெய்வம் தானே தரும்' என்று பிடியை நடத்திச் சென்றான். பறந்து செல்வது போல் நடந்துசென்ற பத்திராபதி காலவேகம் என்னும் நோய் கனற்ற, மெல்லச்சென்று பிரச்சோதனன்நாட்டெல்லையில் மெலிவுற்றது. அதையறிந்த உதயணன்முதலியோர் கீழிறங்கினர்.

உடனே பிடி விழுந்தது. அதன் மத்தகத்தைச் சார்ந்து உதயணன் தடவிக்கொடுத்து அது நற்கதி யடையுமாறு பஞ்சமந்திரத்தை அதன் காதில் ஓதி, "இப்பிறப்பின்கண் என் துன்பம் தீர்த்த பிடியே, வருபிறப்பின்கண் என்னுடன் வாழ்வாயாக" என்று கவலையுடன் கூறி, ஒரு நீர்நிலையடைந்தபோது வானில் வெள்ளி எழுந்தது. உதயணன், பகற்காலத்தில் மறைந்திருத்தற்குரிய ஓரிடத்தைத் தேடிஅடையும் பொருட்டு வாசவதத்தைமுதலியோருடன் நடந்து சென்றான். பருக்கைக் கற்களில் நடந்து சென்றதனால் பஞ்சின் மெல்லடிப்பாவையாகிய தத்தையின் கால்கள் கொப்புளங் கொண்டன. 'இனி நடத்தல் அரிது' என்றெண்ணிய உதயணன், ஒரு பொய்கைக்கரையில் முள்இலவமரச் செறிவில் புறத்தோர்க்குப் புலப்படாதபடி இருக்கும் இடத்தில் இலைகளால் படுக்கை அமைத்துத் தத்தையை அதில் துயிலச் செய்து, காஞ்சனையை அருகிருத்தி வயந்தகனுடன் புறத்தேயிருந்து காவல் புரிந்தான்.

வேடர் வளைத்தது

யூகிக்கு உதவிசெய்துவரும் இடவகன் தங்கி-

யிருக்கும் புட்பகநகரத்தை அடைந்து உதவிக்குப் படைகளை அழைத்துவருமாறு வயந்தகனை அனுப்பி-விட்டு, உதயணன் வாள்வலத்தேந்திக் காவல் புரிந்துவருகையில் பொழுது புலர்ந்தது. உதயணன், வயந்தகன்வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்-தான். பத்திராபதி வீழ்ந்த பாலைவனத்தின் அருகே உள்ள சிற்றூர்களில் வழிப்பறிசெய்து வாழ்பவர்க-ளான வேடர்கள் காலையில் பிடியின் காலடியைப் பின்பற்றிவந்து அது வீழ்ந்த இடத்தில் ஆடவர் மகளிர் கால் சுவடு கண்டு, அடியொற்றி வந்து, உத-யணன் முதலியோர் தங்கிய இடத்தைக் கண்டு, அவர்களை வளைத்துக்கொண்டனர்.

உதயணன் ஒருவனாகவே நின்று பொருது அவர்களை வென்றான். மறுபடியும் அவர்கள் திரண்டு வந்து தத்தையும் காஞ்சனமாலையும் தங்கி-யிருந்த இடத்தில் தீயிட்டனர். மீண்டும் உதயணன் போர் செய்தபோது அவனுடைய வில்லின் நாண் அறுந்துவிட்டது. உதயணன் போர்செய்ய மாட்-டாமல் நிற்கவே வேடர் அவன்கைகளை மேலாடை-யால் கட்டி, "நீங்கள் கொண்டுவந்த பொருளைப் புதைத்துவைத்துள்ள இடத்தைக் காட்டுங்கள்" என்று கூறினர். "நீங்கள் கொளுத்திய தீயினால் நாங்கள் புதைத்த இடம் தெரியவில்லை. தீ ஆறின பின் அவ்விடத்தைக் காட்டுவோம்" என்று உத-யணன் கூறிக் காலம்கடத்தினான்.

துணைப்படை வருகை

அப்போது வயந்தகன் பெரும்படையுடனும்,

உதயணன் தத்தை இவர்கட்கு வேண்டிய ஊர்தி முதலியவற்றுடனும், இடவகனுடனும் அங்குவந்து சேர்ந்தான். வேடர்கட்கும் படைகட்கும் கடும்போர் நிகழ்ந்தது. வேடர் தோற்றோடினர். பின்னர் உதயணன்சார்பில் உருமண்ணுவா ஆளும் சயந்தி-நகரை அடுத்த மலைச்சாரலில் பாடிநகரம் ஒன்று அமைக்கப்பட்டது. உதயணனும் வாசவதத்தையும் தமக்கென்று தனித்தனி அமைத்த வீட்டில் தங்கி இன்புற்றனர். உதயணன் இரவில் நடந்தத-னாலும் போர் செய்ததனாலும் வருந்திய இளைப்புத் தீர்ந்து நீராடி அறுசுவைஉணவு அருந்தினான். தத்தையைச் சேடியர் பலர் நீராட்டி அலங்-கரித்து உணவூட்டினர். அவளும் துன்பம் நீங்கி இளைப்பாறினாள்.

பின்னர், சிறந்ததொரு யானையில் உதயண-னும், உயர்ந்ததொரு தேரில் காஞ்சனமாலையுடன் தத்தையும் புறப்பட்டு, பரிசனங்கள் பலவிதச்சிறப்-புக்களுடன் புடைசூழச் சென்று சயந்தி நகரை அடைந்தனர்.

திருமணம்

உதயணன் தத்தையுடன் வருவது கேட்ட சயந்திநகரத்தார் உவகைக்கடலில் ஆழ்ந்து மங்கலப் பொருள்களை அமைத்து அருகதேவனை எதிர்-கொள்ளும் இந்திரவுலகம்போல உதயணனை எதிர்-கொண்டு வரவேற்றனர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. ஆடவரும் மகளிரும் வாயில்தோறும் வந்துநின்று அவ்விருவரையும் கண்டு, கண்ணும் மன-

மும் குளிர்ந்து, "எங்கள் துன்ப இருளைப் போக்க-வரும் சூரியனே வருக! தெய்வயானையைத் தேடிச்-சென்று சிறைப்பட்டுப் பகைவன்மகளைக் கைப்-பற்றிவந்த சிங்கமே வருக! திருமாலின் திருமார்பில் சேர்ந்த திருமகள்போல எங்கள் அரசனைச் சேர்ந்த பெருமாட்டியே வருக! நீங்களும் யூகியும் நீடூழி வாழ்க!" என்று கூறி வரவேற்று வாழ்த்தினர். உதயணன் அமராவதியில் குடிபுகும் இந்திரன் போலச் சயந்தியில் புகுந்து தன் அரண்மனையை அடைந்து வீற்றிருந்தான்.

இருக்கும் நாட்களில் பெருங்கணியானவன் மணத்துக்குரிய நாளை அறிவித்தான். திருநாள், படைநாள், மணநாட்களில் முரசறையும் வள்ளுவ முதுமகன் யானைமீது முரசறைந்து "அரசன் வெல்க. பூமகள் புணர்க. மண்மகள் மலிக. நகரத்தீர், நான் கூறுவது கேண்மின். தீவினை நீக்கிப் புகழ் உடையவர்களாய் விளங்குங்கள். பிரச்சோதன அரசரின் திருமகளாகிய வாசவதத்தையை நம் அர-சர்பிரான் திருமணம் புரியும்நாள் இதுவாகும்" என்று தெரிவித்தான். கேட்ட நகரத்தார் மகிழ்ந்து வாயில்கள்தோறும் தோரணம் நாட்டிப் பெரிய பந்தர்கள் அமைத்து நல்ல வேலைப்பாடு-களுடன் கூடிய அலங்காரங்களைச் செய்தனர்; நெய்யுடன் கலந்த சோற்றையும் சிற்றுண்டிகளையும் யாவர்க்கும் எந்த நேரத்திலும் அளித்தனர்.

வாயில்களில் செய்யப்பட்ட அலங்காரங்களை அழித்துவிட்ட சிறுபிள்ளைகளைப் பிடித்துக்கொண்டு

சென்று அவர்களுடைய குற்றச்செயல்களைத் தாய்மார்கட்குத் தெரிவிக்கும் ஏவல்மகளிர் ஓசையும், முக்குடை அசையும் சினாலயத்தில் தீர்த்தங்கரர்சரித்திரங்களை விளங்க எடுத்துரைக்கும் பெரியோர்கள் அருகனைப்பூசிக்கும் முழக்கமும், "முடியைத் தவிர மற்றைப்பொருள்களை எவர் கேட்டாலும் உடனே கொடுத்துவிடுக. அதற்குப் பொருள் இரட்டிப்பாக அரசனிடம் பெற்றுக்கொள்க" என்று வணிகர்க்குக் கூறும் பெருமுழக்கமும், குழந்தைகளைக் கூவிப் புத்தாடை உடுத்தி "உம்தந்தையாரோடு மணமண்டபத்திற்குச் செல்க" என்னும் முழக்கமும், பிற முழக்கங்களும் கலந்து ஒலித்தன. கலியாணத்துக்கு வேண்டிய யாவும் அமைக்கப்பட்டன.

அப்போது சோதிடர்வந்து மணம் புரியும் வேளையைத் தெரிவித்தனர். வேதியன் மறையையோதி மணப்பந்தரில் உதயணனையும் வாசவதத்தையையும் ஆசனத்தி லமர்வித்து வேண்டுவன செய்து, 'பொன்மலைபோல் மன்னிவாழ்க' என்று வாழ்த்தினன். சடங்குகள் யாவும் நிறைவேறியபின், மண்ணு நீராடுதல், நகர்வலம் வருதல், தேவாலயம் செல்லுதல் முதலிய யாவும் இனிது நடைபெற்றன. பின்னர், உதயணனும் தத்தையும் அரண்மனையடைந்து அன்புற்று இன்புற்று வாழ்ந்துவந்தனர்.

5. விஞ்சைவேந்தன் மகட்கொடை

திவிட்டன் இளமைப்பருவம்

செல்வமும் கலையும் சிறந்துவிளங்கிய நம் பரத கண்டத்தில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்து விளங்கியது சுரமைநாடு. அந் நாட்டின் தலைநகராய்த் திகழ்ந்தது போதனபுரம். அந் நகரம் எல்லாச் செல்வங்களாலும் சிறந்து, விண்ணவர்நகரினும் விஞ்சியிருந்தது. அந்நகரத்தில் மக்கள் யாதொரு கவலையும் இன்றி, இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

பயாபதி என்னும் மன்னன் அப் போதன நகரத்தைத் தன் அரசிருக்கையாகக்கொண்டு சுரமைநாட்டை ஒருகுடைநிழலில் காத்துவந்தான். அவன் செங்கோன்முறை தவறாதவன்; குடிமக்களை வருத்தாமல், அவர்கள் செலுத்தும் ஆறிலொரு கடமையை ஏற்றுக்கொள்பவன். காவலன் என்னும் பெயர்க்கேற்பப் பயாபதியின் அடிநிழல் குடிகளைக் காத்துவந்தது; முடிநிழல் முனிவர்திருவடியில் மூழ்கியது. குடைநிழல் உலகைக் குளிர்வித்தது. அவ்வரசன் நூலறி புலவர்களைச் சுற்றமாகவும், நல்லமைச்சரைக் கண்களாகவும் கொண்டு ஆட்சிபுரிந்துவந்தான்.

அவனுக்கு மிருகாவதி, சசி என்னும் நல்லார் இருவர் தேவியர் இருந்தனர். அரசன் அவர்களோடு கூடி இல்லறத்தை இனிது நடத்தி வரும் நாளில், தேவருலகத்தை நெடிதுநாள் ஆண்ட

தேவர்இருவர் அம்மகளிரிருவர்கருவில் திருவுடையராய் அமர்ந்தனர். மிருகாவதி விசயன்என்னும் மைந்தனைப் பெற்றாள். சசி திவிட்டன்என்னுந் திருமகனைப் பெற்றாள். மக்கள் பிறந்ததனுலுண்டான மகிழ்ச்சியினால் மன்னன் ஏற்பவர் வெறுக்குமளவு பொருளும் பூணும் நல்கினான். நாடுமுழுதும் நல்விழாக் கொண்டாடியது.

விசயன் வெண்ணிறம் உடையவனாய்ப் பலதேவன்போன்று விளங்கினான். திவிட்டன் காயாம்பூ மேனியனாய்க் கண்ணனை நிகர்த்தான். அவன்கையில் சங்கு சக்கர ரேகைகள் பொருந்தி விளங்கின. இருவரும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்தனர். நல்லாசிரியரை யடுத்துச் சித்திரப்பாவையின் அடங்கி, கலைகளைக் கற்றனர். அரசர்க்குரிய படைப்பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளையும் திறம்படப் பயின்றனர். தன்மக்களின் ஆக்கங்கண்ட அரசன் பெருமகிழ்வெய்தினான்.

கனவு

இங்ஙனம் இருக்கும் நாட்களில் ஒருநாள் அரசன் அரியணையில் வீற்றிருந்தான். மக்கள் இருவரும் அருகில் அமர்ந்திருந்தனர். ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தினரும் தத்தமக்குரிய இருக்கைகளில் இருந்தனர். அரசன் ஏழுநாழிகையளவும் எவர் வரினும் உள்ளே விடுமாறு வாயில்காப்பவனுக்குக் கட்டளையிட்டிருந்தான். புலவர்கள் வந்து அரசனைப் புகழ்ந்து பாடினர்.

அப்போது சோதிடம் வல்லவன் ஒருவன் அரசவையை அடைந்து அரசனைக் கண்டு வணங்கி, "மன்னர் மன்ன, சென்ற இரவில், வானத்திலிருந்து ஒரு வெள்ளையானை வந்து உங்கள் இளைய மகன் திவிட்டனுக்கு வெண்தாமரை மாலையைச் சூட்டித் தன்னிருப்பிடம் அடைந்ததைத் தாங்கள் கனவில் கண்டீர்கள். அதன்பயன் யாதெனின், விஞ்சையர்வேந்தன் ஒருவன் இங்கு வந்து தன்மகளைத் திவிட்டனுக்கு மணஞ்செய்து கொடுத்துவிட்டுச் செல்வான் என்பதேயாகும். இன்னும் ஏழுநாட்களில் விஞ்சையர்உலகத்திலிருந்து ஒரு தூதுவன் விஞ்சைவேந்தன் திருமுகத்துடன் வந்து நம் நகரத்தை யடுத்துள்ள புட்பகாண்டம் என்னும் நந்தவனத்தில் தங்குவான். அதனைக் கண்டருள்க" என்று நிமித்திகன் கூறினன். அதைக் கேட்ட அரசன், அவனது திறமையைப் பாராட்டி, அவன் மனம் மகிழுமாறு பெரும்பொருள் கொடுத்து அனுப்பினன்.

அரசவையிலிருந்த சான்றோர் அனைவரும் "திவிட்டன் இத்தகைய பெருமைக்கு உரியவனே. இவன் மூவுலகங்களையும் ஒருகுடைக்கீழ் ஆளும் ஆற்றல் படைத்தவனே. நிமித்திகன் உரை பொய்யாகாது" என்றனர். நாழிகைமுரசு அடிப்பது கேட்ட அரசன் கொலுவீற்றிருக்கும் இடத்தினின்றெழுந்து அமைச்சர் கூடும் இடமாகிய மந்திரசாலையை அடைந்தான்.

ஆங்குக் குழுமியிருந்த அமைச்சர்களை நோக்கி "இன்று நமதுசபையில் நிமித்திகன் கூறிய செய்தி-

பற்றி உங்கள்கருத்து யாது" என்று அரசன் வினவினன். அதுகேட்ட அமைச்சர்கள் "அரசே, திவிட்டகுமாரன் பிறந்தபோதே சோதிடம்வல்லவர்கள் 'இவன் மூவுலகையும் ஆள்வான்' என்று கூறியிருக்கிருர்கள். அதுவுமன்றி, இவன்கையில் சங்குசக்கர ரேகைகள் உள்ளன. திருமாலின் அமிசமான இவன் ஆக்கிணைச்சக்கரமும் ஏந்துவான் என்பதில் ஐயமில்லை. நிமித்திகன் கூறியபடி விஞ்சைவேந்தன் தன்மகளை அழைத்துவந்து இவனுக்கு மணம் செய்வித்தால் இவ்வுலகத்தில் அதனினும் சிறந்தது வேறில்லை. அரசர் அனைவரும் நமக்கு அஞ்சிப் பணிவர். நிமித்திகன் உரைத்த பொழிலில் விஞ்சையர்தூதன் வந்து தங்குவதற்குச் சிலாதலம் ஒன்றை இயற்றி, துருமகாந்தனைக் காவல் வைக்கவேண்டும்" என்று கூறினர். அரசன் அவ்வாறே சிலாதலஞ் செய்வித்துத் துருமகாந்தனைக் காவல்வைத்தான். துருமகாந்தன் தூதனை எதிர்நோக்கி யிருந்தான்.

இரதநூபுரம்

வெள்ளிமலையில் தென்பகுதியில் புகழ் பெற்ற விஞ்சையர்உலகம் உளது. அங்கு உள்ள மரமெல்லாம் கற்பகம். அருவியாவும் அரமகளிர் நீராடுதலால் மணம் கமழும். அந்நாட்டின் தலைநகரம் இரதநூபுரச்சக்கரவாளம் எனப்படும். எல்லாச்சிறப்புக்களும் வாய்ந்த அப்பொன்னகரத்தின் அரசன் ஜ்வலனஜடி என்பான். அவன் அறமே உருவாய் அமைந்தவன்; உண்மையே உரைப்பவன். அவன்மனைவி வாயுவேகை என்பவள்.

அவள் திருமகளினும் பேரழகு வாய்ந்தவள். அறத்துக்கும் நற்குணங்களுக்கும் உறைவிடமானவள். இவ்விருவர்க்கும் அருக்ககீர்த்தி என்னும் அருமை மகனும், சுயம்பிரபை என்னும் அழகிய மகளும் தோன்றினர். சுயம்பிரபை இனிது வளர்ந்து மங்கைப்பருவம் எய்தினள். அவளை மணக்க விஞ்சையர் பலர் விரும்பினர்.

பொழில் விளையாட்டு

வசந்தகாலத்தில் அரசனும் தேவியும், சுயம்பிரபையும் பிறரும் சிவிகை, தேர், களிறு, விமானம் இவற்றில் இவர்ந்து மனோவனம் என்னுஞ் சோலையை அடைந்தனர். யாவரும் பொழில் விளையாடியும், பூம்புனல் ஆடியும் மகிழ்ந்தனர். சுயம்பிரபை தன் தோழியரோடு புனல் விளையாடியும் மலர்கொய்தும், மாலைதொடுத்தும் களிப்படைந்து தன் தந்தையை அடைந்தாள். அரசன் அனைவரையும் உடன்கொண்டு அச்சோலையின் நடுவில் அருகக்கடவுள்திருக்கோயிலை அடைந்து மும்முறை வலம்வந்து வாயிலில் நின்றான். அப்போது கோயிற்கதவு தானே திறந்தது. அரசன் அருகக்கடவுளை வழிபட்டான். அக்கடவுள்திருவடியில் இட்ட மலரைச் சென்னியில்வைத்து வெளியே வந்தான். அப்பொழுது விண்ணினின்றிழிந்த சகநந்தனன், அபிநந்தனன் என்னுஞ் சாரணர் இருவர் அவனெதிரே தோன்றி அருகனை வழிபட்டுக் கோயிலின் அருகில் அசோகமரத்தின்கீழிருந்த சிலாதலத்தில் அமர்ந்தனர். அரசன் அவர்களை வணங்கினன். அவ்விருவரும், 'பிறவிப்பிணி தீர்க்கும் வழி இறை-

வனைத் தியானித்தலே' என்று அரசனுக்கு அறிவுரை கூறினர். அரசனும் தேவியும் அதுகேட்டு மெய்யறிவு பெற்றனர். சுயம்பிரபை சாரணர்கள்முன்னிலையில் "சக்கரவாளம்" என்னும் நோன்பொன்றினை நோற்க முடிவுசெய்தாள்; தன் கோயில் அடைந்தபின் அதனை நோற்றுப் பெருமை யெய்தினாள். ஜ்வலனஜடியரசன் தன் மகளுக்குத் தக்க மணாளனைத் தேர்ந்தெடுத்தற்பொருட்டு, அமைச்சர்களைக் கலந்து ஆலோசிக்கலானான்.

அமைச்சரை உசாவுதல்

உள்ளே நிகழும் ஒலி வெளியில் கேட்காத மந்திரசாலையில் அரசன்கட்டளைப்படி அமைச்சர் யாவரும் வந்து குழுமினர். அரசன் அவர்களை நோக்கி, "அறிவின்மிக்க அமைச்சர்களே, உலகங் காக்கும் அரசர்கள் நல்வினையுடையவர்களே யாயினும் நூலுணர்ந்த அமைச்சர் உணர்த்தின் அல்லது தாமே அறியும் ஆற்றல் உடையவர்கள் அல்லர். அமைச்சர் துணை யின்றி அரசர் ஏதும் செய்ய இயலாது. எத்துணைச் சிறப்புடைய அரசராயினும் அவர்கட்குப் பழிபாவம் வாராமல் காத்து நல்வழிப்படுத்துவோர் நூலுணர் அமைச்சரே யாவர். முடிமன்னர்க்கு மனமும், கண்ணும், வாழ்க்கையும், வலியும், சால்பும், அரசும், கோலும் அமைச்சரேயாவர். அரசென்னும் வண்டியின் நுகத்தடியை அரசன்ஒருவனே தாங்கியிழுக்கின் அது நடவாது. மற்றொருபக்கம் அமைச்சரும் தாங்கி யிழுத்தால்தான் அவ்வண்டி நன்கு செல்லும். அரசன் உலகை ஆளத் தோள்வலியும் சூழ்ச்சியும் வேண்டும். இவற்றில்

சூழ்ச்சியே சிறந்தது. அமைச்சர்வழிச் செல்லும் அரசனே சூழ்ச்சியுடையனு யிருத்தல் கூடும். அமைச்சரோடு ஆராயாது வினைசெய்யும் அரசன் தனக்கே தீங்குசெய்ய முயல்பவன் ஆவான். நீங்கள் என்னை இறைவனுக்கி அல்லும் பகலும் அறிவுரை கூறிக் காத்துவருதலான் அன்றோ நான் சிறப்புடன் ஆள்கின்றேன்.

"நான் உங்களை அழைத்தது குன்றின்மேலிட்ட விளக்குப்போல் என்குடியை விளக்க வந்த என்மகள் சுயம்பிரபையின் குணத்துக்கும் எழிலுக்கும் ஏற்ற கொழுநன் எங்குளான் என்பதை அறிதற்கே. இதை நீங்கள் நன்கு ஆய்ந்து கூறுங்கள்" என்று கூறினுன். அமைச்சர் பலரும் தங்கள் கருத்துக்களைக் கூறினர். சுமந்திரி என்னும் அமைச்சன் அரசனை நோக்கி, "நாம் ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும். நம்குலத்தார்க்கெல்லாம் தொன்றுதொட்டு மேல்வருவதை ஆராய்ந்து கூறும் சதவிந்து என்னும் நிமித்திகனிடம் செல்லின், நம் நங்கைக் கேற்ற கணவன் இன்னுன் என்பதைத் திட்டமாகக் கூறுவான்" என்று தெரிவித்தான்.

சோதிடங்கேட்டல்

அரசன் சதவிந்துவின் மாளிகையை அடைந்தான். சதவிந்து அரசனை எதிர்கொண்டு வரவேற்று வணங்கி அவன் வந்த காரணத்தைச் சோதிடநூல் வன்மையால் உணர்ந்து, "மன்னர்மன்னரே, தாங்கள் என்னை நாடி வந்தது தங்கள் மகளாரின்

திருமணங்குறித்தேயாகும். தாங்கள் வரும்போது ஒரு பெண் உங்கள் எதிரே வந்தாள். அவள் திருமகளே யாவள். அந்த நற்சகுனத்தாலும் தங்கள் பெண்ணின் கோள்நிலைகளின் மேன்மையாலும் அவளுக்கு ஏற்படும் நன்மைகளை என்னால் அளவிட்டுக் கூறமுடியாது. அருகக்கடவுள் அருளிய மாபுராணத்தில், தங்கள் மகளுக்குக் கணவனாக வரக்கூடிய திவிட்டன் என்னும் இளவரசனது வரலாறு கூறப்பட்டுளது.

"சுவர்க்கநாட்டிலிருக்கும் வாசுதேவர்களில் ஒருவன் போதனநகரத்தில் பயாபதியின் மகனாகத்தோன்றித் திவிட்டகுமாரன் என்னும் பெயருடன் விளங்குகின்றான். அவனே தங்கள் திருமகள் சுயம்பிரபைக்கு உரிய கணவன் ஆவான். அவன் தங்கள் மகளை மணந்தபின், அச்சுவக்கிரீவன்ஆவியையும் ஆழியையும் கவர்ந்து, வடக்குச்சேடி தெற்குச்சேடி இரண்டையும் நீங்களே அரசாளத்தருவான். நான் கூறியவை யாவும் உண்மையென்பதற்கு அறிகுறியாக இன்னம் ஒரு மாதத்திற்குள் திவிட்டன் ஒரு சிங்கத்தின் வாயைப் பிளப்பான். அது நிகழ்ந்தால் பின் நிகழக்கூடியவற்றையும் உண்மையென் றறிந்துகொள்ளுங்கள்" என்று கூறினான்.

அரசன் சதவிந்து கூறியதைக் கேட்டு மகிழ்ந்து அவனுக்குச் சோதிமாலை என்னும் நாட்டைப் பரிசாகக் கொடுத்துத் தன் அரண்மனையை அடைந்தான்; வாயுவேகையிடம் நடந்தவற்றைக்

கூறினன். அவள் பெரிதும் மகிழ்ந்தாள். மறுநாள் அமைச்சர்முதலியோரிடம் சோதிடன் கூறியதை உரைத்தான். அமைச்சர்கள், "பயாபதியிடம் ஒரு தூதனை அனுப்பவேண்டும். தூது செல்லத்தக்கவன் மரீசியே யாவான். அவன் எல்லா நூல்களையும் ஐயம்திரிபு அறக் கற்றவன்; கற்றவர் கேட்கும் வினக்கட்குத்தக்க விடையளிக்கும் ஆற்றல் படைத்தவன்; தூதர்க்கு வேண்டிய அறிவு, உரு, ஆராய்ந்தகல்வி இம்மூன்றும் அமைந்தவன். அவனைப் பயாபதிபால் தூதனுப்பின் நம் குலப்பெருமையை விளக்கிக் கூறி, நம் எண்ணத்தையும் தெரிவித்து முடித்து வருவான்" என்று கூறினர். அதற் கிணங்கிய அரசன் திருமுகம் ஒன்றை யெழுதி மரீசிகைக்கொடுத்து அவன் செய்யவேண்டியவற்றையும் சொல்லி விடுத்தான். மரீசி அரசனை வணங்கி விடை பெற்று வான்வழிச் சென்று போதனநகரை யடுத்துள்ள புட்பமாகாண்டம் என்னும் பொழிலில் இறங்கினன்.

மரீசி தூது

புட்பமாகாண்டத்தில் இறங்கிய மரீசி அச்சோலையின் இனிய காட்சிகளைக் கண்டு வியந்துகொண்டிருந்தான். அச்சோலையில் நறுமணம் சுமந்த தென்றல் வீசியது. அங்கு ஓர் அசோகமரத்தின் அடியில் இயற்றப்பட்டிருந்த சிலாதலத்தைக் கண்ணுற்றான். அங்குக் காவலிருந்த துருமகாந்தன் மரீசியின் பாதங்களில் மலர்தூவி வணங்கி, 'இச் சிலாதலத்தில் எழுந்தருள்க' என்று வேண்டினன். அதுகேட்ட மரீசி, "இது அருகக்கடவுள்

வீற்றிருக்கத்தக்க சிலாதலமன்றே?'' என்று வினவினன். துருமகாந்தன், "எங்கள் பயாபதிஅரசர்-இளைய திருமகன் திவிட்டனுக்கு மணம்பேச விஞ்சையர்தூதர் ஒருவர் ஏழுநாட்களில் வருவார் என்று நிமித்திகன் கூறினன். அத் தூதராகிய தாங்கள் எழுந்தருள் வதற்கு எங்கள்அரசர் இதனை யியற்றி என்னையுங் காவல் வைத்துள்ளார்'' என்று கூறினன். அதுகேட்ட மரீசி அவ்விருக்கையில் வீற்றிருந்தான். அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்யப்பட்டன. விஞ்சையர்தூதன்வரவு கேட்ட பயாபதிமன்னன் அத் தூதனுக்குச் சிறந்த உணவுவகைகள் முதலியவற்றை அனுப்பச்செய்தான். அரசன்-கட்டளைப்படி தூதனை எதிர்கொள்ள விசயனும் திவிட்டனும் நாற்படைசூழ யானைமீது ஏறிச் சென்றனர். அரசகுமாரர்களைக் கண்ட மரீசி தன் இருக்கையினின்றெழுந்து வணங்கினன். அரசிளங்குமாரர் விஞ்சையனகிய அவன் தங்களை வணங்கியதற்குக் காரணங் கேட்டபோது, அவன் "நீவிர் இதுபோது மானிடவுருவந் தாங்கியிருப்பினும் தேவரேயாவீர். உங்களை வணங்கும் பேறுபெற்றயான் நல்வினை யுடையேன்'' என்று புகன்றான். அவர்கள் மரீசியை யானையின்மேல் ஏற்றி நகர்வலமாக அழைத்து வந்தனர். யாவரும் அரண்மனை அடைந்து அரசவையில் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்தனர். அரசன் மரீசியை ஓர் ஆசனத்தில் அமர்வித்தான். அரசனை வணங்கி ஆசனத் தமர்ந்த மரீசி, எழுந்து நின்று தன் அரசனுடைய வெள்ளிமலையிருக்கும் வடதிசை நோக்கி வணங்கி, அரக்கு-முத்திரை யிட்ட திருமுகத்தையும் பயாபதியரசன்-

திருமுன் நீட்டினன். அரசன் மதிவரன்முகத்தை நோக்கினன். அவன் அக் குறிப்பறிந்து அத் திருமுகத்தைத் தன்கையில் வாங்கி முத்திரை நீக்கித் தன் மனத்துள் ஒருமுறை படித்துப் பிறகு அரசன்முன் படிக்கலானன்.

"இரதநூபுர மன்னர் வரையும் ஓலை போதனமாநகரம் புரக்கும் பயாபதிமன்னர் காண்க. அரசர்க்குச் செல்வமும் மேன்மையும் சிறந்திடுக. தங்கள் இளைய திருமகன் திவிட்டநம்பிக்கு என் அருமைமகள் சுயம்பிரபையை வாழ்க்கைத்துணைவியாக்க உறுதிசெய்துள்ளோம். நும் மருகியை அழைப்பித்து மணம்புரிந்திடுக. அரசரும் மணமக்களும் நீடுவாழ்க" என்றெழுதியிருந்த திருமுகச்செய்தி கேட்ட பயாபதிமன்னன் "விஞ்சையர் நம்மினும் உயர்ந்தவரல்லரோ? அவர் தம் பெண்ணை நம் மகனுக்குக் கொடுக்க வுடன்பட்டுத் திருமுகம் எழுதியிருப்பது என்னே! இத்தகைய பெருமை மண்ணுலகத்தார்க்குக் கிடைக்கத்தகுவதோ! இது மிகவும் வியப்பாயிருக்கின்றதே! நம் நல்வினையிருந்தவாறு என்னே!" என்று தனக்குள் மகிழ்ந்து இன்பக்கடலில் திளைத்து ஏதும் கூறுமல் வாளா இருந்தான்.

மரீசியின் சினம்

அதுகண்ட மரீசி "இவ்வரசன் நம் மன்னர்திருமுகத்தை மதித்து விடை யேதும் கூறுமல் வாளா இருக்கின்றனே. இவன் செருக்கின் மிகுதி என்னே!" என்று நினைத்து வெகுண்டு, பயாபதியை

நோக்கிக் கூறுவானாயினன்.

"மண்ணை யாளும் மன்னரே! எத்தகைய பெருமையுடையராயினும் மனிதரிடம் தாமாக வலிய ஒரு வேலையின்பொருட்டுச் செல்பவர்கள் இகழப்படுவார்கள் என்று உலகம் கூறுவது உண்மையே. தேவரேயாயினும் மக்களிடம் சிலநாள் சென்றால் அவர்களை அயலார்போல நோக்கி அவமதிப்பது மக்களியற்கை. இதை இன்று உம்மிடம் கண்டேன். பித்தநோய் மிக்கவர்க்குப் பாலைக் கொடுத்தாலும் அதன் சுவையை அறியமாட்டார்கள். அதுபோல வித்தியாதரர்சிறப்பைப் பொள்ளல்யாக்கை யுடைய மக்கள் அறிவரோ? அறங்கிடந்த நெஞ்சத்தார்க்கன்றிப் பிறர்க்குப் பிறவி யறுக்கும் பெருநிலை எய்துதல் ஆமோ? யானையின் ஆற்றலை அதன் கன்று அறியுமோ? எம்மவர்பெருமை சிறுபுன் வாழ்க்கையுடைய மண்ணுலகமக்களுக்கு வரங்கிடந்தாலும் வரக்கூடியதோ? மண்ணில் வாழும் மக்கள் எத்தகைய சிறப்புடையவராயினும் நுண்ணறிவு படைத்தவர் அல்லர். வெள்ளிமலைவேந்தர் வலிந்து தூதனுப்பியதனாலன்றோ நீர் இவ்வாறு அவரை அவமதித்து, ஓர் உரையும் கூறாதிருக்கின்றீர்" என்று கூறினன்.

பயாபதி மறுமொழி

அச் சினவுரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த பயாபதிமன்னன் மரீசியை நோக்கி, "ஐய, யான் ஒன்றும் உரையாது இருந்தமையால் உம்மரசன்திருமுகத்தையும் உம்மையும் அவமதித்தேனென்று

வெகுண்டீர்போலும். வித்தியாதரர் எம்மினும் பன்மடங்கு மேம்பட்டவர். அவர்கள் தேவர்களேயெனினும் பொருந்தும். அவர்களோடு மக்களுக்குச் சம்பந்தம் உண்டாவது அரிதரிது. தவம் புரிந்தாலும் இது கிடைக்காது. நீர் வந்து தூதுரைத்ததையும், வித்தியாதரமன்னர் திருமுகத்தையும் கனவெனக் கருதினேனேயன்றி நனவில் நிகழ்வனவாகக் கருதிலேன். நும்மரசர் எனக் களித்த பெருமையை எண்ணி எண்ணி இறும்பூதுற்ற யான் இதற்குத்தக்க விடைகளைக் கூறுவதற்குரிய பெருமை மிக்க சொற்கள் எவை என்று தெரியாமல் திகைத்திருந்தேனேயன்றி, அவமதிப்பால் அன்று" என்று அமைதியுடன் கூறினன்.

அதுகேட்ட மரீசி, அரசன் பொறுமையறிந்து, தான் வெகுண்டு புன்மொழி புகன்றதற்கு வருந்தினன்; அரசனை நோக்கி, "ஐய, நான் சிறுமைக்குணத்தினால் சினந்து கூறியதைப் பொறுத்தருள்க. விஞ்சையர் வித்தையினாலன்றி வேறொன்றனுலும் சிறந்தோரல்லர். அவர்களும் மனிதர்களே. வேற்றுமை யொன்றும் இல்லை" என்று கூறித் தன் அரசன்குலவரலாறு கூறினன்; பயாபதிமன்னன்குலத்திற்கும் விஞ்சையர்குலத்திற்கும் முன் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை யறிவித்தான். பின்னர் அரசன் விஞ்சையர்வேந்தன் திருமுகத்தின்படி நடக்கத் தனக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்தான். அதைக் கேட்டுக்கொண்டு மரீசி மீண்டு விரைந்து சென்று விஞ்சையருலகை யடைந்தான்.

விஞ்சையர் மண்ணுலகிற்கு வருதல்

மரீசியினுல் பயாபதிமன்னனுடம்பாட்டை அறிந்த ஜ்வலனஜடியரசன் போதனமாநகரில் தன்மகள்திருமணத்தை நிகழ்த்த முடிவுசெய்தான்; தான் மண்ணுலகம் சென்று மணவினையை முடித்து மீளும்அளவும் தன் நகரைக் காக்குமாறு தன் நண்பர்களான பிரீதிவர்த்தனன்முதலிய எண்மரை நியமித்தான்; தன் நாற்படைகளும் சுற்றத்தவரும் மண்ணுலகுக்குப் புறப்படவேண்டும் என்று கட்டளையிட்டான்.

அரசன்தம்பி ஜ்வலனரதனும், மருமகன் வியாக்கிரரதனும், மகன் அருக்ககீர்த்தியும் சுயம்பிரபைக்குக் காவலாக நாற்படையுடன் வந்தனர். அரசன், சுயம்பிரபை ஏறிச்செல்ல ஒரு விமானம் நிருமித்தான். அவள் உயர்ந்த ஆடையணிகள் தரித்து ஐவகைத்தாயரும் அருகில் வர, கன்னியர் நாற்புறமும் சூழ, தான் வளர்த்த கிளி, நாகணவாய்ப்புள் முதலியவற்றுடனும், பந்து பாவை முதலியவற்றுடனும் வந்து விமானத்தில் ஏறினுள். இன்னியங்கள் முழங்கின. அரசன் யானைமீதிவர்ந்துசெல்ல, அனைவரும் தம் ஊர்திகளில் உடன்சென்றனர்.

அவர்கள் தரையின் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே வானத்தில் சென்று, சுரமை நாட்டில் போதனமா நகரத்தை யடுத்துள்ள 'திருநிலையகம்' என்னுஞ் சோலையில் இறங்கினர்; யானைகளை மரங்களிற் பிணித்தனர்; குதிரைகளைப் பந்திகளில்

கட்டினர்; தேர்களைக் கொட்டில்களில் நிறுத்தினர்; தங்களுக்கென்று அமைத்த பலவகையான மண்டபங்களில் தங்கினர். சுயம்பிரபை தங்கியிருத்தற்கு ஏற்ற காப்பமைந்த கன்னிமாடம் அங்குச் சமைக்கப்பட்டிருந்தது. அவள் தோழியரோடு அதில் தங்கினாள்.

வரவேற்பு

இவர்கள் இங்கு இவ்வாறு இருக்க, மரீசி போதனமா நகரத்தினுள் சென்று அரண்மனையடைந்து பயாபதியரசனைக் கண்டு, "திருமணத்தின் பொருட்டு எம் அரசர் தம் மகளுடனும் பரிவாரங்களுடனும் வந்து இந் நகரை யடுத்த திருநிலையகத்தில் தங்கியிருக்கின்றார்" என்று கூறினான். அதைக்கேட்டு அகமும் முகமும் மலர்ந்த பயாபதிஅரசன், "நமது நகரத்தில் உள்ளவர் அனைவரும் புத்தாடையும் பொன்னணியும் அணிக. பொன்னகரம்போல் நம் நகரைப் புனைக. எங்கும் மகரதோரணம் எடுத்துக் கட்டுக. வாயில் தோறும் நிறைகுடங்களை வைத்திடுக. இரவலர் வேண்டியவற்றைப் பெறவருக. அருகன்கோட்டத்தில் முப்போதிலும் விழா ஆற்றுக. 'அரசர் அனைவரும் வருக' என்று முரசு அறைக. திருநிலையகத்தில் வந்திருக்குந் திருமகளை அழைத்துவரக்கூடிய மகளிர் யாவரும் தம்மைக் கோலம் செய்துகொள்க. அவர்களை ஏற்றிச்செல்லப் பிடியானைகளைப் பண்ணுறுத்துக. அப்பெண்களோடு வீரர்கள் வாட்படை யேந்திக் காவல் புரிந்து செல்க" என்று கட்டளையிட்டு, தன்னுடனே திருநிலையகத்துக்கு வருமாறு மரீசிக்-

குக் கூறி, அவனுக்குத் தக்க சிறப்புக்களைச் செய்தான். பயாபதி பின்னர் விஞ்சையர்க்குச் சிறப்புச் செய்து வரவேற்பதற்குரிய பலவகைப் பண்டங்களையும், அணிகளையும், மணிகளையும் பண்ணுறுக்கப்பட்ட யானை, தேர், புரவிகளின் மேல் ஏற்றி அனுப்ப ஏற்பாடு செய்தான். இரு புதல்வர்களும் தன் அருகே வேழத்தின்மீது வர, அரசன் பட்டத்துயானையின்மேல் ஏறி, வெண்கொற்றக்குடை நிழற்ற, வெண்சாமரை வீசிவர, இன்னியம் முழங்க, நாற்படையும் முன்னும் பின்னும் செல்ல, நடுவே இந்திரன்போலச் சென்றான்.

இவ்வாறு பயாபதிமன்னன் வருவதையறிந்த ஜ்வலனஜடியரசன், அவனை எதிர்கொள்ளத் தானும் நால்வகைப் படைகளுடன் புறப்பட்டான். இருவர்படையும் கங்கையும் யமுனையும் கலந்ததுபோல் கலந்தன. பயாபதியும் விஞ்சையர்வேந்தனும் ஒருவரை யொருவர் மார்புறத் தழுவி, முகமன் கூறி, அளவளாவினர். விசய திவிட்டர் விஞ்சைவேந்தன்அடியில் வீழ்ந்து வணங்கினர். அவர்களை அவன் எடுத்துப் புல்லி அன்பு கலந்த இன்னுரைகளை வழங்கினான்.

அரசன்கட்டளைப்படி விசயதிவிட்டரும், அருக்ககீர்த்தியும் யானைமீதில் ஏறிப் போதனமா நகருள் சென்றனர். கன்னிமாடத்தில் சாளரத்தின் கதவின் பக்கம் வந்து நின்று நகர்வளங் கண்டுகொண்டிருந்த சுயம்பிரபை யானைமீது செல்லும்

விசயதிவிட்டரைக் கண்டாள். அவர்களை இன்னர் என்று தோழி கூறக் கேட்டாள். தோழி திவிட்ட-குமாரனைச் சுட்டிக்காட்டியபோது அவனுடைய தாமரைஅனைய கண்ணும், தடக்கையும், பவள-வாயும், காயாம்பூமேனியும் சுயம்பிரபையின் உள்-ளத்தில் குடிபுகுந்தன. திவிட்டநம்பியைக் கண்-களால் சிறைப்படுத்திய விஞ்சையர்மங்கை சிந்தை கலங்கித் திகைத்து மெய்ம்மறந்து நின்-ருள். பின்னர் ஒருவாறு தெளிந்து மேன் மாடத்திலிருந்து கீழ்இறங்கித் தன்தந்தை யிருக்-கும் இடம் அடைந்தாள். அப்போது அங்கு உடனிருந்த பயாபதிமன்னனை வணங்குமாறு தந்தை கட்டளையிட, அவ்வாறே சென்று வணங்கி-னுள். தன் மருகியின் பேரழகைக் கண்ட பயா-பதிமன்னன் "இத் திருமகளை மனைவியாகப் பெறுந் திவிட்டன் செய்த நல்வினையின் சிறப்பே சிறப்பு!" என்று பாராட்டிப் புகழ்ந்து பேசினுன்.

அப்போது பயாபதிமன்னன்மனைவி சசி-தேவி தன் பரிவாரமகளிர் பலரை விளித்து விஞ்-சையர்மகளைக் கண்டு நலம்விசாரித்து வருமாறு ஏவினுள். அவர்கள் அட்டமங்கலங்களோடு மலர்-மாலை, தோடு, குண்டலம், முத்துவடம் முதலிய-வற்றை ஏந்திச் சென்றனர். யாவரும் திருநிலையகம் அடைந்து சுயம்பிரபையைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்களுள் மாதவசேனை என்பவள் சுயம்பிரபை-யின் உருவத்தை ஒரு பலகையில் எழுதிக்-கொண்டாள்.

அப் பெண்கள் சுயம்பிரபையை நோக்கி, "அம்மையே, உங்கள் மாமியார் எம் கண்களையே தம் கண்களாகக்கொண்டு உம்மைக் கண்டு வரக்-கட்டளையிட்டார்" என்று கூறினர். சுயம்பிரபை குறுமுறுவல் காட்டித் தோழியை நோக்க, அவள் அவர்களைப் பார்த்து, "அன்னையீர், உங்கள் தலையை எங்கள் தலையாகக் கொண்டு நாங்கள் வணங்கியதாக மாமியார்பாதங்களில் வணங்குங்கள்" என்று கூறினாள். அதுகேட்டு மகிழ்ந்த அப் பணிப்பெண்கள் அரசியை அடைந்து நிகழ்ந்ததைக் கூறினர். மாதவசேனை எழுதிவந்த உருவப்படத்-தைக் கண்ட சசிதேவி மிக மகிழ்ந்து அதைத் திவிட்டனுக்குக் காட்டுமாறு பணித்தாள்.

மாதவசேனை திவிட்டனை அடைந்து வணங்கி, "அரசே, அருங்கலம் அரசர்க்கே உரியது. இந்த அருங்கலத்தைப் பார்த்தருள்க" என்று கூறி, படத்தை நீட்டினாள். அவ் வுருவப்படத்தைப் பார்த்த திவிட்டன் 'இவள் எவ்வுலகமடந்தை?' என்று வினவினான். மாதவசேனை அவள் விஞ்சையர்-மடந்தை யென்பதைத் தெரிவித்தாள். திவிட்டன் அப் படத்தையே உற்றுநோக்கி நோக்கி வியப்புற்-றான்; அவள்அழகில் ஈடுபட்டுத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். தீயினால் வெண்ணெய்க்குன்றம் உருகுவதுபோல் அவன்உள்ளம் உருகியது. அப்-போது அருக்கன் மேற்கடலில் ஆழ்ந்தான். சுயம்-பிரபை அருகக்கடவுளின் ஆலயம் அடைந்து அப்-பெருமான்புகழை யாழ்கொண்டு பாடி முதல்யாமத்-தைக் கழித்தாள். பின், தன் கன்னிமாடம் புகுந்து

நிலாமுற்றத்தில் இருந்தாள். ஏனைய வித்தியாதரர் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் இன்புற்றிருந்தனர்.

மண வினை

கதிரவன் குணதிசைக்கடலில் வந்தெழுந்தான். பயாபதிஅரசனும் துயிலெழுந்தான்; அன்று அருகக்கடவுளின் திருவிழாநாள் என்று பறை சாற்றுவித்தான். நகரத்தினர்யாவரும், அரசனும், அரசச் சுற்றத்தினரும் அருகன்கோட்டத்தை அடைந்தனர். பூசை இனிது முடிந்தது. மண வினைக்குமுன் நிகழ்த்தவேண்டிய அருகபூசை முடிந்தபின் அரசன் அன்று திவிட்டநம்பிக்குத் திருமணம் என்று முரசறைவித்தான். நகர் முழுதும் மணவிழாப்பொலிவே காணப்பட்டது. வேற்றுநாட்டரசரும் பிறரும் குழுமியிருந்தனர். அரசன் திருமணவினை ஆற்றுதற்கு உரியனவற்றைக் கண்காணித்து வந்தான்.

திவிட்டனையும் சுயம்பிரபையினையும் புண்ணிய நன்னீரால் ஆட்டி ஒப்பனைசெய்து மணவேள்விச்சாலைக்கு அழைத்து வந்து அவர்கட்குரிய பீடங்களில் இருக்கச்செய்தனர். திங்களும் வியாழனும் சேர்ந்த நல்ஓரையில் மங்கல வாழ்த்தும், மங்கல வாத்தியங்களும் முழங்க, விஞ்சையர்வேந்தன் தன்மகளை நீருடனே திவிட்டன்கையில் நல்கினன். மற்றைய மங்கலவினைகளும் முறைப்படி நிகழ்ந்தன. சான்றோர் வாழ்த்தினர். மகளிர் பல்லாண்டு பாடினர். பயாபதி, விஞ்சையர்க்கும் மண்ணவர்க்கும்

மேலான சிறப்புக்கள் செய்தான். திவிட்டனும் சுயம்பிரபையும் இருதலைப்புள்ளின் ஒருயிராய் இன்புற்று வாழ்ந்திருந்தனர்.